மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 01 புதன்கிழமை (17.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 273




## கொழும்பில் குண்டு வெடிப்பு பேருந்து முற்றாகச் சேதம்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று இடம்பெற்ற பேருந்து குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பேருந்து முற்றாக சேதமடைந்துள்ளது. கொழும்பிலுள்ள கோட்டன் பிளேசில் நேற்று பிற்பகல் 1.50 மணியளவில் இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மொறட்டுவ-மட்டக்குளி பாதையில் பயணிக்கும் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 155 இலக்க வழிப்பாதை பேருந்தே குண்டு வெடிப்பில் சேதமடைந்துள்ளது.

சந்தேகத்திற்கிடமான பொதியொன்று காணப்பட்டதனையடுத்து பேருந்தின் சாரதி பயணிகளை உடனடியாக வெளியேற்றியதாகவும் அதன் பின்னரே குண்டு வெடித்துள்ளதாகவும் தெரிவிக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முறிகண்டியில் விமானத் தாக்குதல் 4 பேர் பலி; மேலும் நால்வர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் முறிகண்டியில் நேற்றுக்காலை 10.10 மணியளவில் இடம்பெற்ற விமானத்தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த நால்வரின் சடலங்களும் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தங்கராசா ஜெசிந்தன் (வயது-24), பொன்னுத்துரை சுஜிந்தன் (வயது -17), கணபதி திருநாவுக்கரசு (வயது 60) ஆகியோரே இறந்தவர்களில் மூவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.


மற்றுமொரு (12 ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரனை கைது செய்தால் இந்தியாவிடம் ஒப்படைப்போம்

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கைது செய்தால் அவரை இந்தியாவிடம் கையளிப்போம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். வெளிநாட்டுச் செய்தியாளர்களை நேற்று முன்தினம் சந்தித்த ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)



கோட்டன் பிளேசின் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் சேதமடைந்த பேருந்து...

## 99 வீதமான தொண்டு நிறுவனங்கள் வன்னியில் இருந்து வெளியேற்றம்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் சேவையாற்றிய உள்ளூர் சர்வதேச தொண்டு நிறுவனங்களில் 99 வீதமான நிறுவனங்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருகை தந்துள்ளன.

தொண்டு நிறுவனங்களை அங்கிருந்து வெளியேறுமாறு அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே இந்த நிறுவனங்கள் வெளியேறியுள்ளன என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

வன்னியிலிருந்து தொண்டு நிறுவனங்களை வெளியேறுமாறு அரசாங்கம் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை வரை காலக்கெடு விதித்துள்ள நிலையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ஐ.சி.ஆர்.சி) அங்கிருந்து வெளியேறவேண்டிய அவசியமில்லை என்றும் அவர் சொன்னார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுழிபுரத்தில் சூடு இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் சத்திய காட்டுச் சந்தியிலுள்ள பேக்கரி ஒன்றினுள் வைத்து ஆயுததாரிகளால் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

பேக்கரி உரிமையாளரான தொல்புரம் சுழிபுரத்தைச் சேர்ந்த மாரிமுத்து நாகலிங்கம் (வயது-72) மற்றும் கல்விளான் சுழிபுரத்தைச் சேர்ந்த அப்பையன் விஷ்ணுவரதன் (வயது-33) ஆகிய இருவருமே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களுள் விஷ்ணுவரதன் என்பவர் சம்பவ இடத்தி (12 ஆம் ப்க்கம் பார்க்க)

## நெடுந்தீவு-நயினாதீவுப் பகுதியில் 4 பெண்களின் சடலங்கள் மீட்பு

நெடுந்தீவு மற்றும் நயினாதீவுப் பகுதிகளில் கரையொதுங்கிய நான்கு பெண்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவில் 8 ஆம் வட்டாரக் கடற்கரைப் பகுதியில் ஒரு பெண்ணின் சடலம் கரையொதுங்கியுள்ளது. இவரது சடலத்தில் பிங்கலர் சல்வார் காணப்படுவதுடன் மணிக்கூடு,தோடு என்பனவும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை நயினாதீவில், கல்லிவரவை இந்து மயானம், பிடாரி அம்மன் கோவிலடி, வெள்ளை மணல்துறை ஆகிய இடங்களில் மூன்று சடலங்கள் நேற்றுக் கரையொதுங்கியுள்ளன.

இதில் ஒரு பெண்ணின் சடலத்தில் பிறவுண் சேட் மற்றும் பாவாடை அணிந்திருந்ததாகவும் எஸ்.எம்.எம்.எஸ் என இடது கையில் பச்சை குத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மற்றொரு சடலத்தில் சாறியும் தோடும் காணப்படுவதாகவும் மூன்றாவது சடலத்தில் சாறி உடுத்திருப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பல்லாயிரக்கணக்கான மக்களை நெருக்கடியில் தள்ளியுள்ள அரசு

### ஐரோப்பிய ஒன்றியம் குற்றச்சாட்டு

(பிரஸல்ஸ்)

வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளை வெளியேறுமாறு இலங்கை அரசாங்கம் கேட்டுக்கொண்டது,

அங்கு வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கான விநியோகங்களை முடக்கியுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான உதவிப் பணிகளுக்கான ஆணையாளர் லூய்ஸ் மைகேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் இடம்பெற்றுவரும் மோதல்களில் அப்பாவி மக்கள் பெரும் பாதிப்புக்களை (12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழுவும் கல்வி அமைச்சும் இணைந்து வேம்படி மகளிர் கல்லூரியில் நடாத்தும் புத்தாக்கக் கண்காட்சியின் ஆரம்ப விழாவான நேற்று வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்படுவதையும் கொடிகள் ஏற்றப்படுவதையும் யாழ்.அரச அதிபர் க.கணேஷுக்கு மாணவி ஒருவர் மலர் மாலை அணிவித்து வரவேற்பதையும் மேலுள்ள படங்களிலும்,

யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறைத் தலைவர் கலாநிதி நா.சிவயோகன் மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் மாணவர்களின் கண்காட்சியை வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- ஆர்.யூ.பாலமுருகன்)

# சமூகத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பு ஆசிரியர்களின் கைகளிலேயேயுள்ளது

## சாவகச்சேரி மாவட்ட நீதிவான் உரை

(யாழ்ப்பாணம்)

சமூகத்தினை கட்டியெழுப்பும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. அவ்வாறான ஆசிரிய சமூகம் நிறைவானதாகவும் நேர்த்தியானதாகவும் பொறுப்புணர்வு மிக்கதாகவும் அமைய வேண்டும் என சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அ.பிறேம்சங்கர் தெரிவித்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி பலாலி ஆசிய கலாசாலையின் மாணவ மன்றத்தினால் வெளியிடப்பட்ட கலாவதி சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாணவர் ஒன்றியத் தலைவர் ப.பால முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் உரையாற்றிய நீதிபதி மேலும் கூறியுள்ளதாவது,

பலாலி ஆசிரிய கலாசாலையானது 21 வருடங்கள் இடம்பெயர்ந்த நிலையிலும் தனது முழு வீச்சுடன் தரம் மிக்க ஆசிரியர்களை ஊருவாக்கி எமது மண்ணில் சாதனை படைத்து வருகிறது. ஆசிரியப் பணி என்பது சீரியது. தொழில் துறைகளிலே உயர்ந்தும் சிறப்புமிக்கதுமாகும்.

ஆசிரியர் பணி சமூகம் நிறைவானதாகவும் நேர்த்தியானதாகவும் பொறுப்புணர்வு மிக்கதாகவும் அமைய வேண்டும். இதற்கென ஆசிரியர்கள் தமது உடல், பொருள், ஆவி, நேரம், சக்தி, வளம் அனைத்தையும் செலவழித்து பாடுபட்டு உழைக்கின்றார்கள் என்பது மறுக்கப்பட முடியாத ஒன்றாகும்.

அவ்வாறான சிறப்புமிக்க தொழிலை நீங்கள் ஒவ்வொருவரும் தேர்ந்தெடுத்துள்ளீர்கள். உங்களை கடந்த இரண்டு வருடங்களாக பயிற்றுவித்து முழுமையான ஆற்றல்களுடன் பூரணம் நிறைந்த ஆசிரியர்களாக தயாராக்கி சமூகத்திற்கு வழங்கவுள்ளது பலாலி ஆசிரியர் கலாசாலை.

மேற்படி கலாசாலையில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்கள் மாணவர்மன்றம் ஒன்றை அமைத்து நல்ல பணிகளில் ஈடுபடுகின்றமை ஆறுதலான தகவலாக உள்ளது. பற்பல புலங்களில் வளவிருத்தியை பெற்றுள்ள நீங்கள் உங்கள் ஆற்றல்களை சமூக நோக்குடன் சமூகத்திற்காகவே வெளிபடுத்த வேண்டும்.

எல்லாமே வியாபாரமாகிவிட்ட இன்றைய சூழலில் கல்வியும் வியாபாரமாகி விட்டதென்ற கவலை எனக்குள்ளது. அந்த சகதியுள் நீங்கள் வீழ்ந்துவிடாது சமூக நலனோடு செயற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (எ)

# கலாசார மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வேலணையில் கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது. இக் கலாசார மண்டபம் நிர்மாணிப்பதற்காக தேச நிர்மாண உட்கட்டமைப்பு அமைச்சு 10 இலட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளது.

கலாசார மண்டபத்திற்கான அடிக்கல்லினை வேலணை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ந.கருணாகரமூர்த்தி நாட்டினார். (எ)

# சிகரெட்டின் விலை ஒரு ரூபாயினால் அதிகரிப்பு

(கொழும்பு)

சிகரெட் வகைகளின் சில்லறை விலைகள் நேற்று முதல் ஒரு ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதற்கான அறிவுறுத்தலை நிதி அமைச்சு, சிலோன் டுபாக்கோ கம்பனிக்கு வழங்கியுள்ளதாக அந் நிறுவனத்தின் உயர் அதிகாரி சஞ்சீவனி ரணசிங்க தெரிவித்தார்.

உள்நாட்டில் விற்பனையாகும் 77 மில்லிமீற்றரை விட நீளமான 10 வகையான சிகரெட்டுக்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள அதேநேரம் அதனை விட நீளம் குறைந்த இரு வகையான சிகரெட்டுக்களின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய 15 ரூபாய்க்கு விற்பனையாகிய கோல்ட்லீப் மற்றும் போல்மோல் ஆகிய சிகரெட்டுக்களின் விலை 16 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# அக்கராயன் மோதலில் 22 இராணுவத்தினர் பலி

## விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதியில் உள்ள அக்கராயன் பகுதியை நோக்கி முன்னகர்வு நடவடிக்கையை மேற்கொண்டுள்ள படையினருக்கு எதிராக நேற்று முன்தினம் நடத்திய கடுமையான எதிர்தாக்குதலில் படைத் தரப்பைச் சேர்ந்த 22-க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டும் 53-க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தும் இருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர் தாக்குதல் காரணமாக படையினர் பின்வாங்கிச் சென்றுள்ள அதேவேளையில், படையினரின் நான்கு சடலங்களும் பெருமளவு ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இம் மோதலில் தமது தரப்பில் ஏற்பட்டுள்ள இழப்புக்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் தகவல்கள் எதனையும் வெளியிடாத போதிலும் குறைந்தளவு இழப்புக்களே ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருக்கின்றனர். (ச-5)

# மேலும் இரு மாகாண சபைகளை கலைப்பதற்கு அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

இந்தவருடத்தின் இறுதிபகுதியில் மேலும் இரண்டு மாகாண சபைகளை கலைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருடம் டிசம்பர் மாதமளவில் மேலும் இரு மாகாண சபைகளை கலைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள வரவு-செலவு திட்ட விவாதத்தின் பின்னர் மாகாண சபைகள் கலைக்கப்படலாம். அதற்கான தேர்தல்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வடமேற்கு மாகாண சபை கலைக்கப்படவுள்ள இரு மாகாண சபைகளில் ஒன்றாகும். இதனை அதன் முதலமைச்சராகிய அதுல விஜயசிங்கவின் கருத்தும் உறுதிப்படுத்தியுள்ளது.

இதனிடையே நவம்பர் 6ஆம் திகதி வரவு-செலவு திட்டத்தை சமர்ப்பிப்பதற்கும் அதன் மீதான விவாதங்களை டிசம்பர் 8ஆம் திகதி வரை மேற்கொள்வதற்கும் மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல்களுக்கு தயாராகுமாறு சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமாகிய மைத்திரிபால சிறிசேனவுக்கு மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)


நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது பாடசாலையின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் குழாய்க் கிணறு ஒன்றை அமைப்பதற்கு ஆவன மேற்கொண்ட சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும்,

செயற்பாடு நிறைவேற அனுசரணை புரிந்த சமூக சேவைகள் அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் திரு.க. தேவேந்திரன் அவர்களுக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் திரு.அ.உதயன் அவர்களுக்கும் வலி.கிழக்குப் பிரதேச அமைப்பாளர் திரு.மா.தர்மராஜா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- பாடசாலைச் சமூகம்

யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை

(C-1571)

# இன்று ஒரு தகவல்

## குழந்தைகள்

ஒரு தகப்பனார் தன்னுடைய பையனைப் பார்த்து, "நீ எப்பொழுதும் புத்திசாலியான பிள்ளைகளுடன் தான் சிநேகிதம் வைத்துக்கொள்ள வேண்டும். அது தான் நல்லது" என்றார்.

உடனே அந்தப்பையன், ''நீங்கள் சொல்வது சரி தானப்பா... ஆனால், என்னைவிட மோசமான பையன்களுக்கு மத்தியில் ஒரு புத்திசாலி தேவை அல்லவா! அதுதான் நான் அந்தப்பையனாக இருந்துவிட்டுப் போகிறான்!" என்றான்.

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் இந்தக்காலத்துப் பிள்ளைகளிடம் வாயைக் கொடுத்துவிட்டால் அதிலிருந்து மீள்வது கஷ்டம்.!

சின்னப் பிள்ளைகளிடமுள்ள இந்த புத்திசாலித்தனத்தை பெற்றவர்கள் தூண்டிவிட வேண்டும்! அதை மழுங்கடித்து விடக்கூடாது. இலேடிஸ் கார்டனர் என்று ஒரு குழந்தை உளவியல் நிபுணர் அமெரிக்காவில் இருந்தார். அவர் என்ன சொல்கிறார் என்றால்...

குழந்தைகள் எதிர்த்துப் பேசுவதை ஓரளவுக்கு அனுமதிக்காது தான் நல்லது என்கிறார். உங்கள் குழந்தை உங்களை எதிர்த்து ஏதாவது சொன்னால் உடனே நீங்கள், "முளைத்து மூன்று இலை விடவில்லை... அதற்குள் உனக்கு இவ்வளவு திமிரா?" என்று கேட்கக்கூடாது.

சின்ன வயதில் பெரியவர்களை எதிர்த்துப் பேச வெளிக்கிட்டால் பின்னர் அந்தக் குழந்தை கெட்டுப் போய் விடும் என்று நினைப்பது தவறு! அப்பாவுக்குத் தெரியாத கணக்கை பிள்ளை சரியாகச் செய்து விடுகிறான்.

உடனே அப்பா அது தனக்கு அவமானம் என்று நினைக்கக்கூடாது! அதைவிட பெரிய அவமானமெல்லாம் தாங்கிக்கொள்பவருக்கு பிள்ளை செய்தது தான் பெரிய அவமானமா? நமது பிள்ளை நம்மைவிட புத்திசாலியாக இருக்கிறானே என்று நினைத்து பெருமைப்பட வேண்டும்.

குழந்தை ஏதாவது உங்களிடம் சொல்ல விரும்பினால் அதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேட்க வேண்டும். அது, தான் செய்த ஒரு காரியத்துக்கு அல்லது செய்யப் போகும் ஒரு காரியத்துக்கு என்ன காரணம் சொல்கிறது என்பதை பரிவோடு கேட்க வேண்டும்.

சின்னப்பிள்ளை ஏதோ விளையாட்டுத்தனமாக பேசுகிறது என்று நினைத்துக்கொண்டு வேறு எங்கேயோ கவனமாக இருக்கக்கூடாது.

ஒரு பையன் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தான் அவனது அம்மா வந்து கூப்பிடுகிறார். "தம்பி... இங்கே வா... கடைக்குப் போகவேண்டும்." என்று சொல்கிறார். பையன் விளையாட்டில் ஏதோ ஒரு முக்கியமான கட்டடத்தில் இருக்கிறான் "கொஞ்சம் இரும்மா... இன்னும் கொஞ்ச நேரம் கழித்துப் போய் வருகிறேன்!" என்கிறான்.

இந்தச் சமயத்தில் அம்மா விட்டுக்கொடுக்க வேண்டும். கோபப்படக்கூடாது. இப்பொழுது கடைக்குப் போய்த்தான் ஆக வேண்டும் என்று வற்புறுத்தினால் அந்தக் குழந்தைக்கு ஏமாற்றம்– கோபம்–வெறுப்பு எல்லாம் வந்து விடும். இது நல்லதில்லை.

அதனால் குழந்தைகளுக்கு நியாயமான பேச்சுரிமையை கொடுக்க வேண்டியது அவசியம் என்று குழந்தை உளவியல் நிபுணர்கள் சொல்கிறார்கள். பிள்ளைகள் ஏதாவது சந்தேகம் கேட்டால் அதற்குப் பதில் தெரியவில்லை என்பதற்காக அப்பாக்கள் கோபப்படக்கூடாது.

ஒரு பையன், அவன் அப்பாவைப்பார்த்து, "அப்பா! ஒரு கல்லை கையிலிருந்து போட்டால் அது ஏன் தரையில் விழுகிறது?" என்றான். புவியீர்ப்பு சக்திதான் அதற்குக் காரணம் என்றார் அப்பா.

"இந்த சக்தி ஏன் மேலே இழுக்கக்கூடாது? எதற் குக் கீழே இருக்கிறது?" என்றான் பையன். அப்பா பார்த்தார் "ஒரு அவசரமான வேலை இருக்கிறது" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஒரு வாத்தியார் வகுப்பில் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். "மாணவர்களே! இந்த உலகம் ஒருநாள் அழியப் போகிறது. எரிமலை குமுறப் போகிறது. வானம் இடிந்து விழப்போகிறது" என்று அடுக்கிக் கொண்டே போனார்.

இதைக்கேட்ட ஒரு பையன் பொறுமையாக எழும்பி, "சேர் அன்றைக்கு பள்ளிக்கூடம் உண்டா சேர்?" என்று கேட்டானாம்! அவனுடைய சந்தேகம் அவனுக்கு!

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# அரசு, தென் இலங்கை மக்களை மயக்கத்தில் வைத்திருப்பதற்காக யுத்தத்தை முன்னெடுக்கிறது

## இடதுசாரி முன்னணி அறிக்கை

(கொழும்பு)

அரசியல் தீர்வு எதையும் கொண்டிராத இந்த அரசாங்கம் தென்னிலங்கை மக்களை மயக்கத்தில் வைத்திருப்பதற்காக யுத்தத்தை முன்னெடுக்கிறது என்று இடதுசாரி முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இடதுசாரி முன்னணி அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று வன்னி மக்களை வவுனியாவிற்கு வருகை தருமாறு அரசாங்கம் பல்வேறு வழிகளில் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது. மக்கள் அரசாங்கத்தின் வேண்டுகோள்களைப் புறக்கணித்தே வருகின்றனர்.

வன்னி மக்கள் மீது கொடுமையான நடவடிக்கைகளைமேற்கொள்ள அரசாங்கம் தயாராகி வருகின்றது. இதற்காகவே அரச சார்பற்ற நிறுவனங்களை அங்கிருந்து வெளியேறுமாறு பணித்திருக்கின்றது. தம்மால் மேற் கொள்ளப்படும் அழிவுகளை மூடி மறைப்பதற்காகவே அரச சார்பற்ற நிறுவனங்களை வெளியேறுமாறு அரசாங்கம் கட்டளை பிறப்பித்திருக்கின்றது.

வன்னி மக்கள் வவுனியா வரலாம் ஆனால், வவுனியா மக்கள் கொழும்பு வரமுடியாது. இதுவே பாதுகாப்புச் செயலாளரின் தர்மமாக காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் அரசபடைகள் முன்னேறிய போது ஏற்பட்ட அழிவுகள் யாவரும் அறிந்த விடயமாகும்.

இன்று அரசியல் தீர்வு எதையும் கொண்டிராத இந்த அரசாங்கம் தென்னிலங்கை மக்களை மயக்கத்தில் வைத்திருப்பதற்காக யுத்தத்தை முன்னெடுக்கின்றது. கொழும்பு நகரத்தில் மக்கள் தங்க முடியும் என உயர்நீதிமன்றம் உத்தரவாதப்படுத்துகின்றது. ஆனால், மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது போல் பாதுகாப்பு செயலாளர் கொழும்பில் வாழும் வடக்கு, கிழக்கு மக்களை அப்புறப்படுத்துவதற்கு ஆயத்தமாகின்றார்.

இந்திய முதலாளித்துவமோ, சர்வதேச ஏகாதிபத்திய சக்திகளோ இந்த இருண்ட நிலையைப் போக்க முன்வரமாட்டா அவற்றின் செயற்பாடுகள் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாகவே உள்ளன.

வாழ்க்கைச் செலவு உயர்வாலும், மனிதவுரிமை மீறல்களாலும், ஊழல்களாலும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள இந்த நாட்டைக் காப்பாற்ற அனைவரும் விழித்தெழ வேண்டும். (அ)

# ஐ.தே.க.வின் பிரதித் தலைவர்களாக, சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தோரை நியமிக்க வேண்டும்

## ரணிலுக்கு காதர் எம்.பி.கடிதம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைப்பின் போது பிரதித் தலைவர்களாக சிறுபான்மை இனத்தை சார்ந்தோர் நியமிக்கப்பட வேண்டும். ஐ.தே. கட்சி ஆதரவாளர்களில் 90 வீத மானோர் சிறுபான்மை இனத்தவர்களே என்றும் ஐ.தே.கட்சி எம்.பி அல்லாஜ். ஏ.ஆர்.எம் அப்துல் காதர் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அப்துல் காதர் எம்.பி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது, எமது கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற செயற்குழு கூட்டத்தின் போது கீழ் கண்ட யோசனை என்னால் முன்வைக்கப்பட்டது.

அதாவது சிறுபான்மையின மக்களில் 90 வீதமானோர் ஐ. தே. கட்சிக்கே ஆதரவளிக்கின்றனர். எனவே, பிரதித் தலைவர் பதவிகளை ஏற்படுத்தி சிறுபான்மையினருக்கு வழங்கப்பட வேண்டும்.

கிறிஸ்தவ மத அலுவல்களுக்காக ஜோன் அமரதுங்க எம்.பி.யையும் இந்துமத அலுவல்களுக்காக கே.வேலாயுதம் அவர்களையும் இஸ்லாம் மத அலுவல்களுக்காக என்னையும் நியமிக்க வேண்டும்.

இக் கடிதத்தின் பிரதிகள் ஐ.தே. கட்சியின் தவிசாளர் ருக்மன் சேனாநாயக்கா, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் செயற் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ)

## இராசி பலன்

17.09.2008

(புரட்டாதி 01, புதன்கிழமை)

ரேவதி முன்னிரவு 10.39 மணிவரை

துதியை பிற்பகல் 12.55 மணிவரை

இராகுகாலம்-12.03-01.33 மணிவரை

சுபநேரம்-04.33-06.03 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | காரிய அலைச்சல், கோபப்படுதல், சுபசெலவு, சயனசுகக் குறைவு. |
| இடபம் | செய்தொழில் விருத்தி, குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம், பெருமையடைதல். |
| மிதுனம் | சுபநிகழ்வு, கடின உழைப்பு, புதிய தகவல், முயற்சி கைகூடும. |
| கடகம் | உடல் உழைப்பு, ஆன்றோரால் மதிக்கப்படுதல், புதிய முயற்சி, திடீர்பயணம். |
| சிங்கம் | ஆரோக்கியக்குறைவு, வீண் தொல்லை, காரியதடங்கல், போசனசுகம். |
| கன்னி | அபூர்வசந்திப்பு, செல்வாக்கு, காரியசித்தி, பொருள்சேர்க்கை. |
| துலாம் | பணவருவாய், சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், பயணம். |
| விருச்சிகம் | வியாபாரவிருத்தி, மரியாதைக் குறைவு, முயற்சி தாமதம், பண விரயம். |
| தனுசு | கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம், ரோகநிலை, முயற்சி தாமதம். |
| மகரம் | கூட்டுமுயற்சி, சகோதரர்கள் வழிநன்மை, விருந்துபசாரம், அந்நியர் சந்திப்பு. |
| கும்பம் | வேலைச்சுமை, முயற்சி தாமதம், உடல் நலக்குறைவு, பண விரயம். |
| மீனம் | தெய்வசிந்தை, புதிய முயற்சி, உறவினர் சந்திப்பு, ஜனவசியம். |

வளவன்

# இலங்கை கடற்படையினர் படகைச் சேதப்படுத்தி எம்மைக் கைதுசெய்தனர் -விடுதலையான தமிழக மீனவர்

நெடுந்தீவு அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர் எமது படகைச் சுற்றிவளைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு படகைச் சேதப்படுத்திக் கைது செய்தனர் என இலங்கையிலிருந்து விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கைக் கடற்படையினரால் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச் சாட்டில் பிடிக்கப்பட்ட 38 மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 10 அம் திகதி 2 படகுகளிலும் 13ஆம் திகதி 5 படகுகளிலும் சென்ற இவர்கள் நெடுந்தீவு அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து நெடுந்தீவு முகாமிற்கு கொண்டு சென்றனர். இதனிடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இலங்கைக் கடற்படையினர் 7 நாட்டுப் படகுகளுடன் 38 மீனவர்களை விடுத்து இந்தியக் கடலோரக் காவற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

இவர்கள் ஞாயிற்றுக்கிழமை மாலை மண்டபம் கரையை வந்தடைந்தனர். இவர்களுள் அந்தோனி (வயது 15) என்பவர் கூறுகையில் நாங்கள் நெடுந்தீவு அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது 30 பைபர் படகில் 100க்கும் அதிகமான இலங்கைக் கடற்படையினர் எங்களைச் சுற்றி வளைத்து துப்பாக்கியால் சுட்டனர்.

நாங்கள் கையை உயர்த்தியபடி சரணடைந்தோம். தோட்டாக்கள் எமது படகுகளைச் சேதப்படுத்தின அதன்பின் நெடுந்தீவு கடற்படை முகாம் கொண்டு சென்ற எங்களை ஞாயிற்றுக்கிழமை விடுவித்தனர் என்றார். (அ)

# புலிகளின் தாக்குதல் சி.டி.க்களுடன் கல்கிஸையில் ஒருவர் கைது-திவயின தகவல்

(கொழும்பு)

புலி உறுப்பினர்கள் பாதுகாப்பு படையினர் மீது தாக்குதலை மேற்கொள்வது போன்ற காட்சிகளைக் கொண்ட சீ.டி.க்களுடன் புலிகளது புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த நபர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்கிசை குற்றத் தடுப்பு பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் இரத்மலானை முதலாவது ஒழுங்கையை வதிவிடமாகக் கொண்டவரெனவும் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற அநாமதேய தகவலைத் தொடர்ந்தே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சந்தேக நபரின் வீட்டினை சல்லடை போட்டு தேடுதல் நடத்திய பொலிஸார் அங்கு பாதுகாப்பு படையினருக்கு எதிராக அவர்கள் மீது புலிகள் தாக்குதலை மேற்கொள்ளும் காட்சிகள் கொண்ட சீ.டிக்கள் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைப் பற்றிய தகவல்கள் அடங்கிய புத்தகமொன்று மற்றும் புலிகள் இயக்கம் சம்பந்தப்பட்ட கடித ஆவணங்கள் பலவற்றினையும் கண்டெடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள நபர் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உறுப்பினரென பொலிஸார் சந்தேகிப்பதுடன் கல்கிசை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஹேமந்தவின் வழிநடத்தலில் பொலிஸ் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களால் சந்தேக நபர் தொடர்ந்தும் விசாரிக்கப்பட்டு வருகின்றார். (அ)

## நடமாடும் சேவை

பிரதேச வைத்தியசாலை சங்கானையில் எதிர்வரும் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிப் பகுதிக்குட்பட்ட வைத்திய நிறுவனங்கள் தொடர்பாக பிரச்சினைகள், தேவைகள், வைத்திய நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் அலுவலகம் தொடர்பான பிரச்சினைகள் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிப் பகுதிக்குட்பட்ட சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகள் போன்றன இச்சேவையில் ஆராயப்படவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஓ)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 10.30 மணியளவில் ''பெரியபுராணம்'' எனும் பொருளிலிலான தொடர் சொற் பொழிவினை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல் வழங்கவுள்ளார். (ஓ-35)

* * *

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் சுழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூஜை முடிவுற்றதும் "ஆன்மீக பாதையில்" என்னும் விடயம் பற்றி பரு.சாயிமந்திர் தலைவர் இ.இராசநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ-35)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வண்ணார் பண்ணை பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான (A.R.V) விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் 12மணிவரை வள்ளுவன் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2 மணிமுதல் 3.30 மணி வரை முருகமூர்த்தி சனசமூக நிலையத் திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத்தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஓ)

## நாதஸ்வரமேதை கானமூர்த்தியின் மறைவுக்கு நல்லை ஆதீன முதல்வர் அனுதாபம்

நாதஸ்வரமேதை வி.கே.கானமூர்த்தியின் மறைவு இசைத்துறைக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு. இவ்வாறு கானமூர்த்தியின் மறைவையொட்டி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் நல்லை ஆதீன முதல்வர் தெரிவித்துள்ளார். அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வி.கே.கானமூர்த்தியின் மறைவு அனைவருக்கும் மனவேதனையைத் தந்துள்ளது. இசை உலகில் தனக்கென ஒரு இடத்தை வகித்துக் கொண்ட வி.கே.கானமூர்த்தி நாதஸ்வர இசைமூலம் எல்லோருடைய மனதிலும் இடம் பிடித்துள்ளார்.

ஆலயங்களிலும் பொது இடங்களிலும் நாதஸ்வர கச்சேரி செய்யும் பொருட்டு இசையைக் கையாளும் பாங்கினால் இசையைப் பற்றி தெரியாதவனையும் அசைய வைக்கும் இவருடைய இசை யாழ்ப்பாண இசைப் பாரம்பரியத்தின் நாதஸ்வர இசையில் நிரப்ப முடியாத இடைவெளியாயிற்று.

சிரித்த முகமும் எல்லோரும் இனிமையாக பழகும் சுபாபமும் உள்ள கானமூர்த்தியின் மறைவு எவ்வகையிலும் ஈடுசெய்ய முடியாதொன்றாகும். வி.கே.கான்மூர்த்தியின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம். (அ)

## உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியேற காணி உரிமை ஆவணங்களைப் பெறுதல்

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வடக்குப் பிரதேச செயலகப் பிரிவின் பல கிராமங்களிலிருந்து பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து ஒரு தசாப்தத்திற்கு மேலாக யாழ்.குடாநாட்டிலும், வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியைத் தமது வதிவிடமாகக் கொண்டிருந்த இக்குடும்பங்களை, அவர்களது நிலங்களில் மீளக் குடியேற்றும் திட்டத்தின்கீழ் காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கான பதிவு நடவடிக்கைகளை வலி.வடக்கு-தெல்லிப்பழை பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகிறது.

ஆனால், காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கான காணிக் கந்தோரில் பதியப்பட்ட உறுதி அல்லது அதன் பிரதி அற்ற நிலையில், மீளக் குடியேறுவதற்கான பதி வினைச் செய்யமுடியாத நிலையில் பல நூறு குடும்பங்கள் இருப்பதாக நிர்வாக வட்டாரங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படியான குடும்பங்களுக்கு காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கான சட்ட பூர்வ ஆவணங்களை யாழ்ப்பாணச் சட்ட உதவி நிலையம் (Jaffna Legal Aid Centre) பெற்றுக் கொடுக்கவிருப்பதாகச் சட்ட உதவி நிலையத்தின் இயக்குநர் ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமானசிங்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கான சட்டபூர்வ ஆவணங்களை பெறவேண்டியிருப்பவர் பின்வரும் விபரங்களை முற்கூட்டியே சேகரித்து, சட்ட உதவிச் செயலமர்வுகள் நடைபெறும்போது கொண்டு வரவேண்டும். இந்தச் செயலமர்வுகள் நடைபெறும் தினம், இடம்,நேரம் என்பவைகள் வலி வடக்குப் பிரதேச செயலரால் கிராம சேவையாள ரூடாக அறிவிக்கப்படும்.

* காணி தொடர்பான ஒற்றி, ஈடு, குத்தகை, வாடகைப் பொருத்தம் போன்ற பிற உறுதிகள் இருப்பின் அவைகள்.

* காணியின் உரித்தாளிகள் இறந்திருந்தால் அவர்களின் மரண அத்தாட்சிப்பத்திரம், திருமண அத்தாட்சிப் பத்திரம், அவர்களின் வாரிசுகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.

* தேவைப்படும் காணியின் பெயர், விஸ்தீரணம், வம்சாவழி போன்ற தகவல்களை அளிக்கக்கூடிய முதியோர்கள்.

* குறிப்பிட்ட காணியானது பெரியதொரு காணியைப் பிரித்த பகுதியாக இருந்தால், பெரிய காணியிலிருந்து பிரித்து வழங்கப்பட்ட அயல் காணிகளின் உறுதிகள், நில அளவையாளர் வரைந்திருந்த படங்கள் (Survey plans)

இது தொடர்பாக மேலதிக விளக்கங்கள் தேவைப்படுமாயின், யாழ்ப்பாணம் 1ஆம் குறுக் குத்தெரு இல 56 இல் அமைந்துள்ள யாழ்ப் பாணச் சட்ட உதவி நிலையத்துடன் நேரடி யாகவோ , அல்லது 021.222, 8989 தொலை பேசி மூலமோ சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் தொடர்புகொள்ள முடியும், அல்லது Jaffna Legal @ Gmail.com என்ற மின் னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா-அபிமன்ன சிங்கம் அறிவித்துள்ளார். (அ)

யாழ்.செய்திகள்

## நல்லூர் அரிமாக் கழகத்தின் மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அரிமாக் கழகத்தின் இரண்டாவது மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்தில் கழகத் தலைவர் லயன்.ஐ.ஏ மகேஸ்வரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு கழகத்தின் அழைப்பின் பெயரில் வலயத் தலைவர் லயன் பி.செந்தில் செல்வன் வருகை தரவுள்ளார். இதனையொட்டி கூட்டமுடிவில் யாழ்.செங்குந்தான் இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவ மாணவிகளுக்கு சப்பாத்துக்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன.

அத்துடன் இப்பகுதியில் வாழும் எண்பது வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்கள் பொன்னாடை மற்றும் மலர் மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதுடன் அவர்களுக்கு அன்பளிப்புகளும் வழங்கப்படும் என கழகத்தலை வர் ஐ.ஏ.மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஓ)

## மென்பந்து கிரிக்கெட் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கனேடிய உலக பல் கலைக்கழக சேவையின் 10 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு, யாழ்.கல்வி வலயத்துடன் இணைந்து பாடசாலை அணிகளுக் கிடையில் மென்பந்து கிரிக்கெட் போட்டி நடத்தப்படவுள்ளன.

இப் போட்டிகளில் இன்று புதன்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு கோண்டாவில் இந்து மகாவித்தியாலய மற்றும் முத்துத்தம்பி மகாவித்தியாலய அணிகள் மோதவுள்ளனர். காலை 10 மணிக்கு வடமராட்சி விக்னேஸ் வரா வித்தியாலய மற்றும் இடைக்காடு ம.வித்தியாலய அணிகள் மோதவுள்ளன.

இரு போட்டிகளிலும் வெற்றியீட்டும் அணிகள் இரண்டும் பிற்பகல் 1 மணிக்கு மோதவுள்ளனர் அத்துடன் காலை 9.30 மணிக்கு நாவாந்துறை றோ.க.த.க.பாட சாலை மற்றும் அத்தியார் இந்துக்கல்லூரி அணிகள் மோதவுள்ளன.

காலை 11 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மற்றும் சென்சாள்ஸ் மகாவித் தியாலய அணிகள் மோதவுள்ளன. இவ்விரு போட்டிகளிலும் வெற்றிபெறும் அணிகள் நண்பகல் 12 மணியளவில் மோதவுள்ளன. இப்போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் யாவரும் அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ் ஆகியவற்றை எடுத்து வரவேண்டும் என்று யாழ்.கல்வி வலயஉதவிக் கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## முகாமைத்துவ பயிலுனருக்கான பரீட்சை ஒக்டோபர் 1 இல்

இலங்கை வங்கியின் தலைமையகத்தால் அண்மையில் கோரப்பட்ட வங்கி முகாமைத்துவ பயிலுனருக்கான விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு யாழ் மாவட்டத்திலிருந்து 177 விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக எமக்கு தெரியவந்துள்ளது.

இதற்கான பரீட்சை ஒக்டோபர் மாதம் 1ஆம் வாரத்தில் கொழும்பில் நடைபெற விருப்பதாகவும் நாம் அறிகின்றோம்.எனவே இப் பரீட்சைக்கு தோற்ற உத்தேசித்துள்ள பரீட்சார்த் திகள் வெளிமாவட்டத்துக்கு செல்வதற்கான பாதுகாப்பு அனுமதியை நேரகாலத்துடன் பெற்று ஆயத்தமாக இருக்குமாறு இலங்கை வங்கி வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் கேட்டுக்கொள்கிறார். (ஓ)

## மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகராட்சி மன்ற பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் இணைந்து யாழ்.மாநகராட்சி மன்ற எல்லைக்குள் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள், உணவு கையாளும் நிலையங்கள், ஐஸ்கிறீம் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேற்கொண்ட சோதனையின் போது பொதியாக்கப்பட்ட உணவுப் பொருட்களான கஸ்ராட் பவுடர், பிஸ்கட் வகைகள், பால் உணவுகள் என்பன கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட வியாபார நிலைய உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

அத்துடன் யாழ்.போதனா வைத்திய சாலையின் முன்புறமாக தெருவோரத்தில் நடமாடும் விற்பனையில் ஈடுபட்டிருந்த சிற்றுண்டி வகை விற்பனையாளர்களது உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டு அவர்களும் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

மற்றும் இச்சிற்றுண்டி வியாபாரிகள் மருத்துவ பரிசோதனை செய்து வைத்திய சான்றிதழ் பெற்றுக்கொள்ளுமாறும், இச் சிற்றுண்டி வகை தயாரிப்பு நிலையம் உள்ளூராட்சி மன்றத்தில் பதிவு செய்து 2008ஆம் ஆண்டிற்கான உரிமம் பெற்றிருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் உணவு கையாளும் நிலையங்கள், ஐஸ்கிறீம் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களில் குறைபாடுகள் காணப்பட்ட நிலையங்களிற்கு 'இவற்றை நிவர்த்தி செய்யும்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டு அறிவித்தலும் வழங்கப்பட்டது.

இவ் அறிவுறுத்தல்களை ஏற்று செயற்படாத பட்சத்தில் உற்பத்தி விற்பனை உரிமையாளர்களிற்கு எதிராகவும் வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கெதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் தெரிவித்துள்ளார். (ஓ)





வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி தமிழ் மாணவர் மன்றத்தினால் 26 வருடமாக நடாத்தப்பட்ட மகாகவி பாரதி விழாவில் முதுபெரும் புலவர் பண்டிதர் வை.க.சிற்றம்பலம் உரையாற்றுவதையும், கல்லூரி மாணவிகள் அ.துவாரகா, ச.சௌமியா ஆகியோர் பாரதியார் இசைநாட்டியம் ஆடுவதையும், கல்லூரி ஆசிரியர்களின் "கவிதை சிரித்தது" வில்லுப்பாட்டு நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- கோபி)

# நோத்முதல் கோபல்லவா வரை 101



### முதலாம் மகா யுத்த காலம்

எனக்குள்ள நீண்டகால அனுபவத்தில் நான் 36 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் எண்ணிறந்த பெரிய வழக்குகளைக் கண்டிருக்கிறேன். பம்பாய், வங்காளம், சென்னை ஆகிய பெரிய நகரங்களில் கலகங்களைக் கண்டுள்ளேன். இராசப் பிரதி நிதியை எறிகுண்டினால் கொல்ல இந்திய மக்கள் முயன்றதையும் அறிவேன். ஆனால் இத்தகைய பெரிய ஆபத்துக் காலங்களிற் கூட இந்திய அரசாங்கம் நீதிமன்றத்தின் அதிகாரத்தைப் பட்டாளத்தாரின் தயவில் தாழ்த்தியமை என்றுமே நடந்ததில்லை. ஆனால் இங்கே இலங்கையில் ஆள்பதி அவர்கள் தமது கண்களை அகல விழித்துக் கொண்டே எவ்வித காரணமும் இன்றி இலங்கை வாசிகளை மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் பேரருள் பாதுகாப்பதைத் தடைசெய்து விட்டுப்பட்டாளத்தைக் கொண்டு அச்சுறுத்துகின்றார்.

அதனால் நீதிமன்றத்தின் ஆளெல்லை அதிகாரமில்லாது ஒடுங்கவும், சட்டங்கள் வலியிழப்பவும், பட்டாளத்தினர் பொதுசனங்களை எவ்வித காரணமும் இன்றிச் சுட்டுப் பொசுக்குமளவில் நிலைமை ஏற்பட்டுள்ளது. இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுப் பல திணைக்களங்களில் அதன் அதிகாரமே மேம்பட்டு நிலவுவதையும், இராணுவத்தினர் கல்நெஞ்சம் உள்ளவராய் நடப்பதையும் பார்க்க, ஆங்கிலேயனாய எனக்கு வெட்கமாயிருக்கிறது'' என்பது ஏட்லி நோட்டன் எழுதியதன் சுருக்கமாகும்.

உண்மையில் இராணுவத் தலைவனாய பிரிகாடியர் ஜெனறல் மக்கம் என்பான் குரூரமாகவே ஆட்சிசெய்தான். அவன் போக்கை இராமநாதன் அவர்கள் துணிகரமாக எள்ளளவும் எவர்க்கும் அஞ்சாமல் சட்ட சபையில் எடுத்துக்கூறினார். அவர் ஒருவருக்கே அதனைப் பற்றிக் கூறுவதற்குத் துணிவும் அதிகாரமும் பொறுப்பும் தகுதியும் இருந்தவென்பர். அவர் இலங்கை மக்களின் ஏகப் பெரும் பிரதிநிதியாதலாலும் அஞ்சா நெஞ்சினராதலாலும் பெருஞ் சொற் கொண்டலாலும் இரக்கமனம் உள்ளவராதலாலும் அப்பணியைச் செய்தார் என்க. அவரைவிட வேறெவரும் அப்படிப் பேசக்கூடிய மனோ பாவமும் தைரியமும் உள்ள வராய் இருக்க வில்லை. அவர் சட்டசபையில் 1915 செப்ரம்பர் இறுதி நாள்களில் பேசி விட்டுத் தம் குதிரை வண்டியில்ஏறப்போன போது பொது மக்கள் குதூகலத்துடன் பெரிய குரலெடுத்து அவரை வாழ்த்தி வணங்கினார்கள்..என்று D.R விஜயவர்த்தனா தம்மனைவியாருக்கு எழுதியகடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

#### மீள் பார்வை

இனக்கலவரம் நடை பெறுவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் மது ஒழிப்புப் பிரசாரத்தில தீவிரமாக உழைத்த பெரியார்களான D.Bயயத்திலக, W.Aத. சில்வா, D.S சேன நாயக, C பத்துவந் தொடாவ ஆகியோர் உட்பட பல பௌத்த மதப் பெரியார்கள் இராணுவ அரசாங்கத்தால் கலகத்தைத் தூண்டியவர்கள் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

அவர்களை விடுதலை செயவதற்காகவே இராமநாதன் அவர்கள் பகீரதப்பிரயத்தனஞ் செய்தார். அதுவும் அவர் அவர்களுடைய பிரதிநிதி என்றதால் அவருடைய கடமையு மாயிருந்தது. ஆள்பதி சாமேஸ் அவர்களுடன் பேசி பயனில்லை எனக் கண்ட இராமநாதன் அவர்கள ஆள்பதியையே இலங்கையை விட்டு மாற்றிவிட இங்கிலாந்துக்குப் புறப் பட்டார்.

மகாயுத்த நெருக் கடியும் ஜேர்மனியரின் எம்[illegible]டன் என்ற நாசகாரிக்கப்பலின் அட்டூளியமும் கடற்பிரயாணத்தில் பேராபத்தாயிருந்த காலம் அது. அவ்வேளையில் தம் உயிரையே பொருட்படுத்தாது கடமை யொன் றையே பெரிதாகக் கொண்டு அபிமானம் நிறைந்த நெஞ்சுடன் சென்ற இராமநாதன் அவர்கள் இங்கிலாந்தில் உள்ள குடியேற்ற மந்திரியாரையும் பிறரையும் கண்டு இலங்கைய ரின் துயரை எடுத்துரைத்தார். அவர் கூறியவற்றைக் கருத்துடன் கேட்ட மந்திரி மார் ஆள்பதி சாமேஸ் அவர்களை உடனடி யாகத் திருப்பியழைத்துவிட்டு ஆவன செய்வதில் ஈடுபட்டார் கள்.

இராமநாதன் அவர்களுடைய வெற்றி, பரணிபாடிப் போற்றப்படவேண்டிய தொரு நிகழ்ச்சி. அது இலங்கைச்சரித்திரத்திலே ஏற்பட்ட பெரிய திருப்பம். அவர் இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு மீளும் நாளை எதிர்பார்திருந்த சிங்களப் பெருமக்களின் சிந்தை நிறைவால் கொழும்பு மாநகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. இராமநாதன் அவர்களை வரவேற்ற சிங்களப் பெரியார்கள் இன்றும் உயிரோடு இருக்கிறார்கள். இராம நாதன் அவ்களின் ஊர்வலத்துக்கு ஒழுங்கு செய்யப்பட்ட வண்டியின் குதிரைகளை அவிழ்த்து விட்டு அப்பெரியார்கள் நெடுங் கயிறு கட்டித்தாமே வடந்தொட்டு வண்டியை இழுத்தும், பட்டுக்குடை, ஆலவட்டம் பிடித்தும் கௌரவமாக இராமநாதனை வெற்றிப்பவனியில் வீதி வழியே கொண்டு சென்றார்கள். வருக வருக இலங்கைப் பெரும கனார் வருக. வருக வருக இலங்கைப் பிரதிநிதியே வருக இலங்கையர் பிரதிநிதி நீடுழி வாழ்க வாழ்க எம் கிழவனார் என்னும் வாழ்த்துச் சுலோகப் பலகைகளை அணி யணியாக அவரை வர வேற்று உபசாரஞ்செய்தன. அக் கண்கொள்ளாக் காட்சியை அற்புதமாகச் சித்தரிக்கும் படம் பரமேஸ்வராக்கல்லூரி யின் மேல்மாடியில் தென் கோடியில் அழகாகத் தொங்குகிறது.

(தொடரும்)

க.சி.குலரத்தினம்






ஊரெழு கிழக்கு ஆனந்த கானம் இலங்கை வங்கிக் கிராம அங்குரார் பண விழாவில் வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ந.சிவரட்ணம் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் வி.ஏ.அருமைநாயகம், சிரேஷ்ட முகாமையாளர் ஜேந்திரா, சுன்னாகம் மேற்தரக்கிளை முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார் மற்றும் ஊர்பிரமுகர்கள் ஆகியோர் நிற்பதை முதலாம் படத்திலும். வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.



நல்லூர் உற்சவ காலத்தில் நாவலர் மணிமண்டபத்தில் நடாத்தப்பெற்ற ஆன்மீக நிகழ்வுகளில் பங்கு பற்றிய வட்டு கண்ணகி அம்மன் அறநெறிப்பாடசாலை மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோருடன் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைப்பு உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம்.

# தொல்லியல் நோக்கில் 7

## கந்தரோடையும் கதிரமலையும்

தென்னிந்தியாவில் பௌத்த மதம் பரவிய நாடுகளில் எல்லாம் அம்மத மொழியான பிராகிருத மொழியை எழுத வடபிராமி எழுத்தே பயன்படுத்தப்பட்டன. இதன் செல்வாக்கை தமிழகத்திலும் ஓரளவு காணமுடிகிறது. ஆயினும் அங்கு கல்வெட்டுக்கள் தமிழில் எழுதப்பட்டதுடன் தமிழ் மொழிக்கே சிறப்பான ஈ, ற, ன, ள. ழ போன்ற எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டன.

இந்த வேறுபாட்டால் வட பிராமியில் இருந்து தமிழகப் பிராமியை வேறுபடுத்த அதற்கு தமிழ்ப்பிராமி எனப்பெயரிடப்பட்டது. இலங்கையைப் பொறுத்தவரை பௌத்த மதத்துடன் வடபிராமியும் பிராகிருதமும் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அதற்கு முன்னதே தமிழகச் செல்வாக்கால் தமிழ்ப் பிராமியும் தமிழ் மொழியும் பயன்பாட்டில் இருந்ததை இங்கு கிடைத்த பல பிராமியக் கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன. (Karunaratne 1960 Abayasinga 1975 Fem ando 1969, Velu ppillai 1980) அவை பின்வருமாறு,

1. ஓரிரு வடிவங்களைக் கொண்ட பௌத்த, சமண குகையின் தோற்ற அமைப்பு தமிழகமும், இலங்கையும் ஒரே பிராந்தியத்திற்கு உரியதெனக் கருதும் அளவிற்கு ஒற்றுமையுடையன.

2. வடபிராமியில் பயன்படுத்தப்பட்ட கூட்டெழுத்து இரு நாடுகளிலும் பயன்படுத்தப்படவில்லை.

3. இலங்கைப் பிராமிக் கல்வெட்டில் காணப்படும் 'அ'', 'இ'' 'உ'' 'க''ச''த''ப'' 'ய'' போன்ற எழுத்துக்கள் வடபிராமியில் காணப்பட்டாலும் இதன் வடிவமைப்பு (shape) தமிழ்ப் பிராமி எழுத்துக்களுடன் ஒத்துள்ளன.

4. தமிழ்ப் பிராமியில் தமிழ் மொழிக்கே சிறப்பான 'இ' 'ழ'' 'ள'' 'ற'' 'ன'' போன்ற எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 'இ' என்ற ஒலிப் பெறுமானமுடைய எழுத்து இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்



2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராகிருத மொழிக் காசனம் கந்தரோடை

வெழுத்து தமிழகத்தில் இருந்து நேரடியாகப் பரவாது வட இந்தியாவுக்குச் சென்று அங்கிருந்து இலங்கைக்கு வந்ததாக ஒரு கருத்துண்டு. ஆனால் வடபிராமியில் கிறிஸ் துவுக்கு முன் இவை பயன்படுத்தப்படவில்லை. பிற்பட்ட சாத்தவாகன, குப்தர் காலக் கல்வெட்டுக்களில் இது பயன்படுத்தப்பட்டாலும் இது 'ஈ; என்ற ஒலிப்பெறுமானம் பெற்றிருந்தது. இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் தான் இது 'இ'' 'ஈ'' என்ற ஒலிப்பெறுமானம் பெற்றிருந்தது. 'ழ'' என்ற எழுத்து வட இலங்கையில் பெரிய புளியங்குளக் கல்வெட்டில் காணப்படுகிறது. 'ள'' என்ற எழுத்து இலங்கையில் 40 இற்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

5. தமிழிப் பிராமியில் 'ம'' என்ற ஒலிப் பெறுமானத்திற்குரிய தனித்துவமான வரிவடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் வடிவமைப்பு வடபிராமி எழுத்தில் இருந்து வேறுபட்டது. இலங்கைப் பிராமிக் கல்வெட்டில் வடபிராமிக்குரிய 'ம'' வடிவம் அரிதாகவும், தமிழ்ப் பிராமிக்குரிய 'ம'' வடிவம் பரவலாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

6. இலங்கைப் பிராமிக் கல்வெட்டு எழுத்தை ஆராய்ந்த பலரும் தமிழ்ப் பிராமிக்குரிய 'ள'' ற' போன்ற எழுத்துக்கள் இங்கு பயன் படுத்தப்படவில்லை என்றே இதுவரை கால மும் கூறிவந்துள்ளனர். ஆனால் எமது ஆய்வின் போது பல கல்வெட்டுக்களில் இவ்விரு எழுத்துக்களையும் அடையாளங்காண முடிந்துள்ளது.

மேற்கூறப்பட்ட அம்சங்களில் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழகத்துடன் ஒற்றுமை கொண்டுள்ளமை தமிழகத்தைப் போல் இலங்கையிலும் தமிழையும் தமிழ்ப் பிராமி எழுத்தையும் பயன்படுத்தும் மக்கள் வாழ்ந்ததற்குச் சான்றாகும்.

தமிழகத்தில் தமிழ் மொழியின் தொடக்க காலச்சான்றாக கி.மு. 3ஆம் நூற்றாண்டில் இருந்து பயன் படுத்தப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் சான்றாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் மொழி தோன்றியதன் பின்னரே அம் மொழிக் குரிய எழுத்துக்கள் தோற்றம் பெறுகின்றன. இதனால் இக் காலத்திற்கு முன்னரே தமிழ் மொழி பயன்பாட்டில் இருந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இது இலங்கைக்கும் பொருந்தும்.

இலங்கையில் தமிழ் மொழியின் பயன்பாடு எக்காலத்தில் இருந்து தோற்றம் பெற்றது என்பதை திடமாகக் கூறமுடியாவிட் டாலும் இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்னரே பயன்பாட்டில் இருந்தது என்பதற்கு பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் பட்டம் (உதாரணம் பருமகன், பருமகள், வேள், குடம்பிகன், ஹபதிஹன்) சமூகம் (பரதவர் ஆய், குழு) உறவு முறை (மருக, மருமான், மருமகன், மகள், முகள், சகலன்) தனிநபர் (பூதன், பூதி, உதிரன், அபயன், மல்லன், தீசன், சுமன், சிவன்) போன்ற பெயர்களைச் சான்றாகக் குறிப்பிடலாம். (புஷ்பரட்ண 2001) இவற்றில் பல பெயர்கள் சங்க இலக்கியத்தில் வரும் பெயர்களை ஒத்திருக் கும் அதேவேளை சில பிராகிருத மொழிக் குரிய பெயர்கள் தமிழ் மொழியின் செல்வாக்கால் தமிழ் மயப்படுத்தப்பட்டுள் ளன. உதராணமாக:- குடும்பிகன், ஹபதிஹன், தீசன், அபயன் போன்ற பெயர் களைக் குறிப்பிடலாம்.

உறவு முறைப் பெய ராக வரும் மரு மகன் என்ற பெயர் தமிழகத்தில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டுக்கு பின்னரே அறியப்படுகிறது. ஆனால் அவ்வுறவுப்பெயர் இலங்கையில் கி.மு. 2ஆம் நூற்றாண்டில் இருந்து புழக்கத்தில் இருப்பது சிறப்பாக நேக்கத்தக்கது. (I.C.1970 Nos. 634, 1161).

வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
ப. புஷ்பரட்ணம்

மேற்கூறப்பட்ட ஆட்பெயர்களுடன் கல்வெட்டுக்களில் வரும் பல்வேறு இடப்பெயர்கள் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் இருந்து இலங்கையின் பல வட்டாரங்களில் செறிவான தமிழ்க் குடியிருப்புக்கள் இருந்ததை உறுதிப் படுத்துகின்றன. சங்க இலக்கியத்தில் தமிழகத்தில் இருந்த 300 இற்கு மேற்பட்ட இ.ப்பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அப்பெயர்கள் அனைத்தும் அதே வடிவத்தில் பிற்காலத்திலும் தொடந் திருந்தது எனக் கூறமுடியாது.

(தொடரும்)

# சிம்பாப்வே ஜனாதிபதியும் எதிர்க்கட்சி தலைவரும் வரலாற்று முக்கியத்துவ உடன்படிக்கையில் கைச்சாத்து

(சிம்பாவே)

சிம்பாப்வே ஜனாதிபதி ரொபேர்ட் முகாபே



யும் எதிர்க்கட்சித் தலைவர் மோர்கன் தஸ்வான் கிரேயும் வரலாற்று முக்கியத்துவ மிக்க அதிகாரப் பகிர்வு உடன்படிக்கையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைச்சாத்திட்டனர்.

தலைநகர் ஹரேரேயில் இடம்பெற்ற இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் வைபவத்தில், அநேக ஆபிரிக்கத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் ரொபேர்ட் முகாபே நாட்டின் ஜனாதிபதியாகவும், ஆயுதப் படைகளின் தலைவராகவும், அமைச்சரவை தலைவராகவும் கடமைப் பொறுப்பு வகிக்கவுள்ளார். மோர்கன் தஸ்வான்கிரே பிரதமராகவும், அமைச்சர் குழுவின் தலைவராகவும் விளங்குவதுடன் பொலிஸாரை கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் பெறுகிறார்.

மேலும் அமைச்சரவையில் ரொபேர்ட் முகாபேயின் ஸனு-பி.எப். கட்சி 15 அமைச்சர்களையும் மோர்கன் தஸ்வான் கிரேயின் ஜனநாயகமாற்ற இயக்கத்துக்கான கட்சி 16 அமைச்சர்களையும் கொண்டமையவுள்ளது.

அமைச்சர் குழுவின் தலைவர் என்ற ரீதியில் மோர்கன் தஸ்வான் கிரே நாட்டின் அன்றாட விவகாரங்களை முகாமை செய்யும் பொறுப்பைப் பெறுகிறார். எனினும் மேற்படி உடன்படிக்கை குறித்து ரொபேர்ட் முகாபேயோ அன்றி தஸ்வான்கிரயோ எதுவித விமர்சனத்தையும் செய்யவில்லை.

பணவீக்க நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள சிம்பாப்வே பொருளாதாரத்தை கட்டியெழுப்ப சர்வதேச நன்கொடையை பெறும் முகமாகவே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் சிம்பாப்வே அதிகாரிகளுக்கு எதிரான தடைகளை அகற்றுவது தொடர்பான தீர்மானம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரை பிற்போடப்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய வெளிநாட்டு கொள்கைத் தலைவர் ஜாவியர் சொலானா தெரிவித்தார். (அ)

## பதவியிலிருந்து விலக மலேசியப் பிரதமர் மறுப்பு

மலேசிய பிரதமர் பதவியில் இருந்து விலகும் பேச்சுக்கே இடமில்லை என்று அப்துல்லா அகமது படாவி கூறியுள்ளார். மலேசியாவின் எதிர்க்கட்சி தலைவரான அன்வர் இப்ராஹிம் ஆளுங்கட்சியில் உள்ள அதிருப்தி எம்.பிக்களின் உதவியுடன் ஆட்சி அமைக்கப்போவதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் படாவியை சந்தித்து தம்மை ஆதரிக்கும் எம்.பிக்களின் பட்டியலை அளிக்கப்போவதாக அன்வர் இப்ரா ஹிம் கூறியிருந்தார். இந்த நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் அப்துல்லா அகமது படாவி இப்ராஹிமின் கூற்றில் உண்மை இல்லை என்றும் பதவி விலகும் நிர்ப்பந்தம் தமக்கு எதுவும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இப்ராஹிம்மை சந்திக்க தாம் முன்வந்தால் தனது ஆதரவாளர்களுடன் தனது அறைக்கு வந்து அவர் கூச்சல் எழுப்புவார் என்றும் இது தான் இப்ராஹிமின் வழக்கம்என்றும் படாவி தெரிவித்தார். (அ)

# ஒரே கால பகுதியில் பயிற்சி பெற்று இணை விமானிகளான தாயும் மகளும்

## கணவனின் துணையிருந்தால் பெண்கள் சிகரங்களைத் தொடமுடியும் என்கிறார் ஜூரடித்

மும்பையில் , ஒரு தாயும் மகளும் ஒரே காலப்பகுதியில் விமானஓட்டுனர் பயிற்சி பெற்று வெவ்வேறு விமான நிறுவனங்களில்



இணைவிமானிகளாக பணியாற்றி புதுமை படைத்துள்ளனர்.

இது குறித்து கௌரவம் பார்க்காமல் என்னை ஊக்கு வித்தது எனது கணவர் தான் என தாயார் ஜூடித் கூறியுள்ளார். நெல்லை மாவட்டம் காவல்கிணறைச் சேர்ந்த பி.டி பாரதியின் மனைவியான ஜூடித் ஜெஸ்லி (வயது 41) மற்றும் அவர்களது மகளான பவிகா (வயது 19) ஆகியோரே இவ்வாறு சாதனை படைத்துள்ளனர். பாரதி மும்பையில் அச்சிடல் தொழில் புரிந்து வருகிறார்.பவிகா சிறுவயதிலிருந்து வைத்திய ராக வேண்டும்என்ற இலக்கையே கொண்டி ருந்தார். எனினும் பிளஸ்2 முடித்ததும் அவருக்கு ஒரு திருப்புமுனை ஏற்பட் டது. குடும்ப நண்பர் ஒருவர் அவருக்கு விமானியாக வருவதற்கான ஆசையை தூண்டி விட்டார்.அதற்கு அவரது பெற் றோரும் பச்சைக்கொடி காட்டினர்.

இதனையடுத்து மும்பையில் உள்ள விமான ஓட்டிபயிற்சி மையத்தில் பயிற்சியை முடித்த அவர் கிங்பிஷர் நிறுவனத்தில் சேர்ந்தார். பல்வேறு பயிற்சிகளை நிறைவு செய்து கொண்டு இணை விமானியாகினார். இதே வேளை மகளுக்கு துணையாக பயிற்சிக்கு சென்ற ஜூடித்திடம் நீங்களும்கூட பயிற்சி பெறலாம்எனசிலர்கூறவே அவருக்கும் ஆர்வம் வந்தது. இதையடுத்து மகள் படித்த கல்லூரியிலேயே அவரும் சேர்ந்தார். இருவரும் ஒன்றாக சேர்ந்தே விமான ஓட்டிப் பயிற்சிக்குச் சென்றனர்.முதலாவது முயற்சியிலேயே பவிகாவுக்கு இணைவிமானி வேலை கிடைத்தது. ஜூடிக்கு 3 முறை முயற் சித்த பின்னர் 4ஆவது முயற்சியில் இணை விமானியாகப் பணி புரியும் வேலை கிடைத் தது.

இப்போது பவிகா ங்பிஷரிலும் ஜூடித்டெக்கான்நிறுவனத்திலும் இணைவிமானி களாக பணியாற்றுகின்றனர். இது குறித்து ஜூடித் கூறுகையில் நான் விமானத்தை இயக்கும் அளவுக்கு முன்னேற்றம் பெறுவதற்கு எனது கணவர் பாரதிதான் காரணம். கௌரவம் பார்க்காமல் பரந்த மனதோடு எனக்காகபல கஷ்டங்களை சகித்துக்கொண்டு நான் விமானியாக மாற ஊக்கப்படுத்தி நல்ல ஒத்துழைப்புத் தந்தார்.

அதனால் இந்தத் துறையில் நான் எப்படிப்பட்ட முன்னேற்றம் அடைந்தாலும் அது அவரையே சாரும்.ஒரு பெண்ணுக்கு திருமணத் தோடு வாழ்க்கை முடிந்து விடுவதில்லை. கணவனின் ஒத்துழைப்பு இருந்தால்சிகரங் களைபெண்கள் தொடமுடியும் . அதற்கு வயது ஒரு தடையல்ல இதற்கு நான் ஒரு உதாரணம். (அ-6)

## மனைவி கமீலாவை இங்கிலாந்தின் இராணியாக்க இளவரசர் சார்ல்ஸ் முடிபு

இளவரசர் சார்ல்ஸ் தனது மனைவி டயானா கார் விபத்தில் மரணம் அடைந்த பிறகு காதலி கமீலா பார்க்கரை 2ஆவது திருமணம் செய்து கொண்டார். 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த திருமணம் நடைபெற்றது.

சார்ல்ஸ் திருமணம் செய்து கொண்டதால் அவர் இராணி எலுசபெத்துக்குப் பிறகு மன்னர் ஆகும் தகுதியை பெற்றுவிட்டார். ஆனாலும் கமீலாவை இராணியாக ஏற்றுக் கொள்ள இங்கிலாந்து மக்கள் பெரும் பாலானவர்கள் விரும்பவில்லை. ஏற்கனவே 2 ஆண்டுகளுக்கு முன்பு நடத்திய கருத்துக் கணிப்பில் இது தெரியவந்தது.

ஆனால் கமீலாவை எப்படியும் இராணியாக்கி விட வேண்டும் என்று சார்ல்ஸ் தீவிரமாக இருக்கிறார்.

இது தொடர்பாக அரசியல் சட்ட நிபுணர்கள், மதத் தலைவர்கள், தனது உதவியாளர்களுடன் அவர் இரகசிய ஆலோசனை நடத்தி வருகிறார். (அ)

# அரிய இஸ்லாமிய அலங்கார பளிங்கு ஜாடி ஏலத்தில் 5 மில்லியன் டொலருக்கும் அதிகமான தொகை எதிர்பார்ப்பு

(லண்டன்)



ஆயிரம் ஆண்டுகள் பழைமையான அரியஇஸ்லாமிய பளிங்கு ஜாடி யொன்று பிரித்தானிய கிறிஸ்ரி ஏல விற்பனை நிலையத்தில் ஏலத்தில் விடப்பட்டுள்ளது.

இந்தியா இஸ்லாமிய கலைப்படைப்பான இந்த ஜாடி, 5 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமான விலை போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகில் இதையொத்ததாக 7 ஜாடிகள் மட்டுமே உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த ஜாடியானது அதனுடைய மகிமை அறியப்படாத நிலையில், கடந்த ஜனவரி மாதம் பிரித்தானிய லோன்ஸ் ஏல விற்பனை நிலையத்தில் இடம் பெற்ற ஏலத்தில் 400 அமெரிக்க டொலர் செலுத்தி மிகவும் மலிவாக கொள்வனவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கி.பி.1908 ஆம் ஆண்டுக்கும் 1187 ஆண்டுக்கும் இடையில் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க எல்லைப் பகுதியை ஆட்சி செய்த கெய்ரோவை அடிப்படையாகக் கொண்ட பர்திமித் ஆட்சியாளர் களுக் காக இந்த அலங்கார ஜாடி உருவாக்கப்பட்டதாக லண்டன் தூர கிழக்கு மற்றும்ஆபிரிக்க ஆய்வு பாடசாலை தெரிவிக்கிறது.

(அ-6)

# உலக பங்குச்சந்தைகளில் கடும் விலை வீழ்ச்சி

அமெரிக்காவில் தற்போது ஏற்பட்டுள்ள நிதிக் கொந்தளிப்பை அடுத்து உலகெங்கும் பங்குச் சந்தை விலைகளில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளன.

அமெரிக்காவின் நிதிச் சந்தை அமைந்துள்ள வால் ஸ்ட்ரீட்டின் முக்கிய பங்குச் சந்தையான டவ் ஜோன்ஸின் குறியீடு இரண்டரை சதவீதம் குறைந்தது.

இதையடுத்து லண்டன் பங்குச்சந்தையில் ஐந்து சதவீதம் வீழ்ச்சி ஏற்பட்டது. இதைப் போலவே பிரங்க் பாட் மற்றும் பாரிஸ் பங்குச் சந்தைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டன அங்கு முக்கிய குறியீடுகள் நான்கு சதவீத அளவுக்கு குறைந்தன.

வங்கிகளின் பங்குகளே பெரும் நட்டத்தை சந்தித்தன உலகின் ஒரு பழைமையான அதே சமயம் பெருமை வாய்ந்த ஒரு முதலீட்டு வங்கியான லீமென் சகோதரர்கள் நிறுவனத்தில் ஏற்பட்ட நிலைமைகளை அடுத்து முதலீட்டாளர் கள்எடுத்த முடிவே இதற்கு காரணமாக அமைந்தது. (அ)

## உலக தரிசனம்

# வெடிகுண்டுத் தாக்குதல்களில் ஈராக்கில் 35பேர் பலி

(பக்தாத்)

ஈராக்கில் நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதல்களில் 35 பேர் கொல்லப்பட்டனர். பாக்தாத்தின் வடகிழக்கே தியாலா மாகாணத்தில் பெண் மனித வெடிகுண்டு நடத்திய தற்கொலை தாக்குதலில் சம்பவ இடத்திலேயே 22 பேர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க படைகளால் கைதுசெய்யப்பட்ட ஈராக் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார். அப்போது அங்கு கூடியிருந்த ஏராளமான பொலிஸார் மத்தியில் அந்த பெண்மனித வெடிகுண்டு தனது உட்லில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

2 பொலிஸ் அதிகாரிகள் உட்பட பல பொலிஸார் இதில் உயிரிழந்திருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர். இதனிடையே ஈராக்கில் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட வெடிகுண்டுதாக் குதல் களில் 13பேர் கொல் லப்பட்டுள்ளனர். (அ)

# திருச்சபைக்கு புறம்பாக விவாகரத்து பெற்றவர்களின் மறுமணங்களை அங்கீகரிக்க முடியாது-பாப்பரசர்

(பாரிஸ்)

திருச்சபைக்கு புறம்பாக விவாகரத்து பெற்று மறுமணம் செய்து கொள்ளும் கத்தோலிக்கர்களின் முறையற்ற உறவுகளை திருச்சபையானது அங்கீகரிக்க முடியாது என பாப்பரசர் 16 ஆம் ஆசிர்வாதப்பர் தெரிவித்தார்.

பிரான்ஸின் புனித நகரான லோர்டஸின் கூடியிருந்த அந்நாட்டு ஆயர்கள் மத்தியில் ஞாயிற்றுக்கிழமை உரையாற்று கையிலேயே, பாப்பரசர் இவ்வாறு தெரிவித்தார். முறையற்ற பிணைப் புகளுக்கு ஆசிர்வாதம் வழங்குவது அனுமதிக் கப்பட மாட்டாது என அவர் வலியுறுத்தினார்.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் திருச்சபைக்கு புறம்பாக விவாகரத்து செய்து மறுமணம் செய்யும் கத்தோலிக்கர்கள் தொடர்பில், திருச்சபையானது நெருக்கடியை எதிர் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

# தமிழக முகாம்களில் இருக்கும் இந்திய வம்சாவளி தமிழர் 28,500பேருக்கு இலங்கை பிரஜாவுரிமை

## அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் பிரேரணை

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து சென்று நீண்ட காலமாக தமிழக முகாம்களில் தங்கியிருக்கும் இந்திய வம்சாவளி தமிழர்கள் 28 ஆயிரத்து 500 பேருக்கும் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவது தொடர்பான பிரேரணை அடுத்த வாரம் பாராளு மன்றத்தில் முன் வைக்கப்படவுள்ளது.

தமிழகத்தில் தங்கியிருக்கும் அந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவின் கோரிக்கைக்கு அமைய இந்த பிரேரணை முன்வைக்கப்படுகிறது.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து நாட்டை விட்டு வெளியேறியவர்களே பெரும்பாலும் இவ்வாறு தமிழக முகாம்களில் பிரஜாவுரிமை இன்றி தங்கிருப்பதாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் பிரதித் தலைவரும் ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் தெரிவித்தார்.

தமிழக முகாம்களில் தங்கியிருப்பவர்களில் ஏறத்தாழ 2ஆயிரத்து 500பேர் இந்தியப் பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வி நிலையங்களிலும் பட்டப்படிப்பை பெற்றவர்கள் எனவும் பிரஜாவுரிமை இல்லாததால் அவர்களால் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாகவும் சந்திர சேகரன் கூறினார்.

அவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்க இந்திய அரசாங்கம் விரும்பவில்லை. இதனால் தான் அவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு நாங்கள் முன்வந்தோம். இதற்காக பாராளுமன்றத்தின் ஊடாக சட்ட திருத்தம் ஒன்றை கொண்டுவரவுள்ளோம்.

இது தொடர்பான பிரேரணை அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் இலங்கை இனப்பிரச்சினை காரணமாக வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் குறித்தும் அக்கறை செலுத்தப்படும் என அவர்குறிப்பிட்டார்.

பிரஜாவுரிமையைப் பெற்று இலங்கைக்குத் திரும்புவதற்கு தமிழகத்தில் உள்ள முகாம்களில் தங்கியிருக்கும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் பல விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் மேலும் கூறினார்.

இந்தவிடயம் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் ஜே.வி.பியின் பாராளு மன்ற உறுப்பினர் பிமல்ரட்ணாயக்க சமந்தவித்தியாரட்ன, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமான், அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் , தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் ரேணுகாஹேரத் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (அ)

## சேவை நலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியில் கடந்த 35 வருடங்களாகக் கடமையாற்றியவரும் தற்பொழுது உப அதிபராக கடமையாற்றுபவருமான பொ.மகேஸ்வரன் இன்றுடன் தனது சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். இதனையொட்டி இன்று காலை 9மணிக்கு அவரது சேவையைப் பாராட்டு முகமாக கல்லூரிச் சமூகம் சேவை நலன் பாராட்டு விழாவை நடாத்த உள்ளது. (ஓ)

## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அரசடிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் நேற்று முற்பகல் 11மணியளவில் துவிச்சக் கரவண்டி ஒன்ற திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

## துடுப்பாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப் பாடசாலை துடுப்பாட்ட சங்கம், ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் நடாத்தும் 15 வயதுக்குட்பட்டோருக்கான துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று புதன் கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணக் கல்லூரியின் பிக்னெல் மைதானத்தில் நடைபெறஉள்ளது.

இப்போட்டியில் யாழ் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் எஸ்.ஜெயராஜசிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ)

## உலகை வெற்றி கொள்ளும் சிறுவர்கள்

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கி கல்வி அமைச்சுடன் இணைந்து நடாத்தும் சித்திரம், தனிப் பாடல், பேச்சு, கட்டுரை, குறுநாடகம் ஆகியவற்றில் பங்கு பற்றும் மாணவ/ மாணவிகளின் உறுதி செய்யப்பட்ட விண்ணப் பப்படிவங்கள் தற்பொழுது ஹற்றன் நஷனல் வங்கிக் கிளைகளில் ஒப்படைக்கப்படுகின்றது. விண்ணப்பப்படிவங்களை ஒப்படைக்க வேண்டிய இறுதிநாள் எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக் கிழமை ஆகும்.

பேச்சு, பாடல், குறுநாடகம் ஆகிய போட்டிகளின் மாகாண மட்ட தேர்வுகள் எதிர்வரும் 21ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

போட்டிகளில் பங்கு பற்றும் மாணவ/மாணவிகள் யாழ். இந்து மகளீர் கல்லூரிக்கு காலை 8.30 மணிக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

போட்டிகள் யாவும் காலை 9மணிக்கு ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## தேசியக்கல்வியற் கல்லூரி பட்டமளிப்பு விழா- 2008

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியற் கல்லூரிகளில் 2004/ 2006 கல்வியாண்டில் பயிற்சி முடித்து வெளியேறிய ஆசிரியர்களுக்கான பட்டமளிப்பு விழா ஒக்டோபர் மாதம் 13 ஆம்திகதி திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் குறித்த கல்வியாண்டில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கல்லூ ரிக்கு சமூகமளிக்குமாறு பீடாதிபதி எஸ். கே.யோகநாதன் கேட்டுள்ளார். (ஓ)

## பண்டிதப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

கீழத்தேயக் கல்விக் கல்லூரியில் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் பண்டித பாலப் பண்டிதப் பரீட்சைகளை நடத்தவுள்ளது.

ஒக்டோபர் மாதம் 4, 5, 6, 7 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இப் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் 223 கே.கே.எஸ். வீதியில் உள்ள சங்கப் பணிமனையிற் தொடர்பு கொள்ளுமாறு சங்கச் செயலாளர் ம.ந. கடம்பேசுவரன் அறிவித்துள்ளார். (அ)

# இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள அமைச்சர் ரோஹித்த வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

தேச நிர்மாண அமைச்சரும் களுத்துறை மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான ரோஹித்த அபேகுணவர்த்தன திங்கட்கிழமை அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பயாகலவில் வைத்து விஷப்பாம் பொன்று தீண்டியதன் காரணமாகவே அவர்களுத் துறையிலுள்ள தனியார் வைத்தியசாலை யொன்றில் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தேச நிர்மாண அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்தன முறைகேடாக சொத்துக்களை சேர்த்தார் என்ற இலஞ்ச ஊழல் முறைப்பாடுகளை விசாரிக்கும் ஆணைக் குழுவிற்கு கிடைத்த முறைப் பாட்டை அடுத்து இலஞ்ச ஊழல் தடுப்பு அதி காரிகளால் அவர் கடந்த 13ஆம் திகதி சனிக்கிழமை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள் ளார்.

45 கோடி ரூபா பெறுமதியான நிதி மற்றும் சொத்துக்களை சேமித்தார் என்ற முறைப்பாட்டிற்கு அமைவாகவே இலஞ்ச ஊழல் முறைப்பாடுகளை விசாரிக்கும் ஆணைக் குழுவின் சொத்துகள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் அவரிடம் சுமார் 3மணித்தியாலங்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவிற்கு எதிராக கிடைத்த முறைப்பாட்டை விசாரணை செய்வதற்காக ஆணைக்குழுவிற்கு வருமாறு அவருக்கு இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் அழைப்பு விடுக்கப் பட்டிருந்த போதிலும் அவர் வருகைதரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆணைக்குழுவினால் அழைப்பு விடுக்கப்பட்ட காலத்தில் அமைச்சர் வருகை தராமையினால் இந்த முறைப்பாட்டை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதில் சுமார் நான்கு மாதங்கள் காலதாமதம் ஏற்பட்டதாகவும் ,

இந்த முறைப்பாட்டை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதன் காரணமாகவே ஆணைக் குழ்வில் சொத்துக்கள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸ் அதிகாரி இடமாற்றப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கடல்ராஞ்சி

Botanical Name - Salacia Reticulata
Family -Hippocrataceae
Sinh: Kothala himbutu

கடல் ராஞ்சியானது பருத்த மர ஒரு கொடியாகும். இதன் பட்டைகளை வெட்டினால் குங்குமநிறத்தில் காணப்படும். பட்டைகளின் வெளிப்பக்கம் மஞ்சள் நிறமாக இருக்கும். இலைகள் தனியிலை எதிரிலை அடுக்கம். 6.3-11.4 செ.மீ. வரை நீளமுடைய கோள வடிவ இலைகள். மேற்பக்கம் பிரகாசமாகவும், இலையின் கீழ்ப்பக்கம் வெளிறிய நிறத்திலும் ஆனால் தெளிவாக நரம்பமைப்புகள் காணப்படும். பூக்கள் ஒழுங்கானவை, இருபாலானவை பச்சை கலந்த மஞ்சள் நிறமுடையவை பழங்கள் கோலைடிவினறோஸ் கலந்த செம்மஞ்சள் நிறமுடையவை 1-4 விதைகள் கனியத்துள் காணப்படும். மஞ்சள் நிற விதைகள் பங்குனி, சித்திரை மாதங்களில் பூக்க அவதானிக்கலாம்.


**பரம்பலும், இனவிருத்தியும்:**

யாழ் மாவட்டத்தில் மீசாலை சோலை அம்மன் கோவில்,சுட்டிபுரம் அம்மன் கோவில், கேரதீவு, குடத்தனை ஆகிய பகுதிகளில் பரம்பல் காணப்படுகின்றது. வேர்க் கன்றுகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

**மருத்துவப் பயன்கள்**

நீரிழிவு நோயிற்கு இம் மூலிகையின் வேர்ப்பட்டையும், தண்டுப்பட்டையும் ஓர் சிறந்த மருந்தாகும்.

✠40 கிராம் கடலழிஞ்சில் வேர்ப்பட்டையா



வது அல்லது அதன் தண்டுப்பட்டையாவது இடித்து ஓர் மட்குடுவையில் போட்டு 600 மி.லீ சுத்த சலம் விட்டு 90 மி.லீ ஆக சுண்டக் காய்ச்சி வடிகட்டி தினம் 3 வேளை 30 மி.லீ வீதம் கொடுக்க நீரிழிவு கட்டுப்படும்.

**கடல் ராஞ்சி சத்து**

400 கிராம் கடழிஞ்சிப் பட்டையை நன்றாய் இடித்து ஒரு வாயகன்ற மட்குடத்தில் போட்டு 2400 மி.லீ சுத்த நீர் விட்டு அடுப்பில் வைத்து கால்ப் பங்காக சுண்டக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி மீண்டும் முன் பாண்டத்தை அலம்பி அடுப்பில் வைத்து அதில் விட்டுக் குழம்பு பதமாகக் காய்ச்சிப் பீங்கான் தட்டுக்களில் விட்டு சூரிய வெளிச்சத்தில் வைத்து உலர்த்தி இடித்து சூரணமாகச் செய்து வைத்துக் கொள்வதுண்டு இதுவே *கடல் ராஞ்சி -கடலழிஞ்சில் பட்டைச் சத்தாகும்.*

இது நீரிழிவுக்கு ஓர் சிறந்த விளைத்திறனுடைய மருந்தாகும். இதில் 500 மி.கி இருந்து 2 கிராம் வரை தினம் இரு வேளை ஆடை நீக்கிய பாலுடன் கொடுக்க நீரிழிவு கட்டுப்படும்.

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)**
**சிரேஷ்ட விரிவுரையாளர் , சித்தமருத்துவத்துறை**
**யாழ்.பல்கலைக்கழகம் ,கைதடி.**

கடல் ராஞ்சி மரத்தின் கட்டைகள் குடைந்து நீர்க்குவளை அல்லது கூஜாமாதிரி வடிவமைத்து சுத்தமான நீரினை முதல் நாள் இரவு மேற்படி குடுவைக்குள் ஊறவிட்டு மறு நாட் காலை வெறும் வயிற்றில் அருந்திவர நீரிழிவு நாளடைவில் கட்டுப்படும். இப்படியான இயற்கை முறைகளை மனித உடம்பு இயல்பாக ஏற்றுக் கொள்ளும்.

## இலங்கைத்தமிழரிடம் தமிழகத்தில் கப்பம் கோரியதாக முறைப்பாடு

(கொழும்பு)

இலங்கை தமிழர்களிடம் தமிழகத்திலும் கப்பம் கோரப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர் ஒருவரிடம் கியூகாவல் துறையினர் எனக் கூறி ஒருவர் கப்பம் கோரியதாகக் திருச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் வசிக்கும் இலங்கைத் தமிழர் ஒருவரிடமே சுமார் 15 லட்சம் ரூபா கேட் கப்பட்டுள்ளது.

திருச்சி கே கே நகர் பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பவம் குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் திருச்சி காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். (அ-6)

# பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் தமிழ்ச் சமூகம் அழிக்கப்படுகிறது -ரவி கருணாநாயக்கா

(கொழும்பு)

பயங்கர வாதத்துக்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் தமிழ்ச் சமூகம் அழிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு சமூகத்தை நசுக்கி அடக்கி ஒடுக்குவதன் மூலம் அரசாங்கத்தினால் விரோதத்தை மட்டுமே சம்பாதிக்க முடியுமே தவிர சமாதானத்தை காண முடியாது என்ற ஜக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டம் எம்.பி.ரவி கருணா நாயக்க தெரிவித்தார்.

கடந்த காலங்களில் அப்பாவித் தமிழர்களை பஸ்களில் ஏற்றி வவுனியாவுக்கு கொண்டு சென்றது போல் மீண்டும் ஒரு முறை அதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாகத் தெரிகின்றது. இது அடிப்படை உரிமை மீறலாகும். இதற்கு ஜக்கிய தேசியக் கட்சி கடுமையான கண்டனத்தை தெரிவிக்கின்றது என்றும் அவர் கூறினார். காரணங்கள் இன்றி தலைநகரில் தங்கியிருப்போரை வெளியேற்றுவது என அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றமை தொடர்பில் கேட்ட போதே ரவி கருணா நாயக்க எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

இலங்கை என்பது இங்கு வாழும் மூவினத்தவருக்கும் பொதுவான நாடாகும். யாரும் எவ் விடத்திற்கும் போகலாம், வரலாம். அதே நேரம் குடியிருக்கவும் முடியும். ஒரே நாட்டு மக்களை குறித்த இடங்களில் இருந்து பலாத்கரமாக விரட்டியடிப்பது சட்டத்துக்கு முரணான செயலாகும். பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்ற போர்வையிலேயே அரசாங்கம் யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கின்றது; இதில் அப்பாவித் தமிழர்களும் கொல்லப்படுகின்றனர் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ளாமல் இருப்பது வேதனையான விடயம்.

இதனால் குறித்த ஒரு சமூகம் அழிக்கப்படுவதாகவே தெரிகின்றது. ஈவிரக்க மின்றி சமூக அழிப்பை நடத்திவிட்டு அதனூடாக வெறுப்புக்களை சம்பாதித்துக் கொண்டு இந் நாட்டில் எவ்வாறு சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்பது சகல மட்டத்தினரினதும் கேள்வியாக இருக்கின்றது.

இன்றைய கால கட்டத்தில் தமிழ் மக்கள் மிருகங்களைப் போலவே நடத்தப்படுகின்றனர். கடந்த காலங்களில் கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் இருந்து தமிழ் மக்களை பஸ்களில் ஏற்றி வவுனியாவுக்கு கொண்டு சென்றமையை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். இவ்விடயம் தொடர்பில் உயர் நீதி மன்றத்திலும் தடை விதிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் தற்போது கொழும்பில் காரணமின்றி தங்கியிருப்பவர்களை வெளியேற்றவுள்ளதாக அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.



அரசாங்கம் ஏன் இவ்வாறு நடந்து கொள்கின்றது என்பது தெரியவில்லை. ஆனால் ஒரு இனத்தை மட்டுமே குறி வைத்து செயற்படுகின்றமை மட்டும் தெளிவாகின்றது. யாவருக்கும் சமத்துவம் இருக்க வேண்டும் என்பதையே எமது கட்சி வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது. அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகளை ஐ.தே.க. மிக வன்மையாக கண்டிக்கின்றது. (அ)

# ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி கையெழுத்து வேட்டை கொழும்பில் ஆரம்பம்

## நாடு முழுவதும் விஸ்தரிக்கப்போவதாகவும் ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தொழிலாளர்களின் உழைப்பினை உறிஞ்சிக்கொண்டிருக்கின்ற அரசாங்கம் அவர்களது வருமானத்தைப்பற்றி கவலைப்படுவதாக இல்லை. எனவே உழைக்கும் வர்க்கத்தினருக்கு உடனடியாக ஐயாயிரம் ரூபாய் சம்பள உயர்வினை வழங்க வேண்டும் என தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவரும் வடமத்திய மாகாண சபை ஜே. வி.பி. உறுப்பினருமான வசந்தசமரசிங்க தெரிவித்தார்.

தோட்டத்தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 500 ரூபாய் தனியார் மற்றும் அரச ஊழியர்களுக்கு 5ஆயிரம் ரூபா என்ற அடிப்படை யில் சம்பள உயர்வினை அரசாங்கம் உடனடியாக வழங்க வேண்டும் என வலியுறுத்தி கொழும்பு- கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஜே.வி.பியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கையெழுத்து வேட்டை நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே வசந்த சமரசிங்க இதனைத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் இராமலிங்கம் சந்திர சேகரன் எம்.பி.யும் கலந்துகொண்டார். இங்கு வசந்தசமரசிங்க எம்.பி. மேலும் கூறுகையில் அரசாங்கத்தின் கொள்கையற்ற பொருளாதாரத்தால் இன்று நாடு பாரிய வீழ்ச்சியை எதிர்நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது விலைவாசி அதிகரிப்பினால் மக்கள் நசுக்கப்பட்டு வாழமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். உழைக்கும் வர்க்கத்தினரிடம் உழைப்பைப் பெற்றுக்கொள்ளும் அரசாங்கம் அவர்களது வருமானம் குறித்துச் சிந்திப்பதில்லை. தோட்டத் தொழிலாளர்கள் அனைத்துத் தரப்பினரிலும் பார்க்க அதிகமான பொருளாதாரச்சுமையை தாங்கிக் கொண்டுள்ளனர். எமது கோரிக்கைப்படி சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும். ரயில் போக்குவரத்துக்கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டும். அதேபோல் , அத்தியாவசியப் பொருட்களின் விலை களையும் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் எதிர்வரும் காலங்களில் பாரிய போராட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும் அரசாங்கம் சந்திக்க நேரிடும். தொழிலாளர் வர்க்கத்தினரின்பாலும் நாட்டு மக்களின் நலனிலும் நம்பிக்கை கொண்டதாக எதிர்வரும் வரவு-செலவுத்திட்டம் அமைய வேண்டும் என்றும் தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் கூட்டமைப்பு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றது. (அ)

# அரசியலமைப்புச் சபைக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கக்கூடிய 17ஆவது திருத்தச் சட்டம்

## அமைச்சர் டியூ. குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

17ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்களைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரங்களை அரசியலமைப்புச் சபைக்கு வழங்கக் கூடிய வகையில் மாற்றத்தை ஏற்படுத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர், அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அனைத்துக் கட்சிகளிடையேயும் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி புதிய மாற்றம் தொடர்பான இறுதி அறிக்கையைத் தயாரிக்கப்பட்டு அரசியலமைப்புச் சபை மீண்டும் உருவாக்கப்படும் என அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

அனைத்துக் கட்சிகளும் கடந்த வாரம் கூடி 17ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடியிருந்ததாகக் குறிப்பிட்ட அமைச்சர் டியூ.குணசேகர இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே அரசியலமைப்புச் சபை அமுல் படுத்தப்படும் எனக் கூறினார்.

அனைத்துக் கட்சிகளிடமிருந்தும் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் எனக்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. அரசியலமைப்புச் சபையை அமுல்படுத்தாமையானது எதிர்மறையான சட்டப் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

சுயாதீன ஆணைக்குழுவானது நிறைவேற்று அதிகாரம் நீதித்துறை மற்றும் பாராளுமன்றம் போன்றவற்றுக்குப் பதிலளிக்க முடியாது எனவும் ஆணைக்குழுவின் அதிகாரம் இவற்றில் தாக்கத்தைச் செலுத் தாது எனவும் டியூ.குணசேகர கூறினார்.

இதனால் அரசியலமைப்புச் சபை சுயாதீன பொலிஸ் பொதுமக்கள் நீதிச் சேவைகள் மற்றம் தேர்தல்கள் ஆணைக்குழுக்களை அமைப்பதில் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பது தொடர்பான விடயங்கள் பற்றி ஆராய்வதற்கு பிறிதொரு பாராளுமன்றக் குழுவை அமைக்குமாறு சர்வகட்சிகள் பரிந்துரைத்திருப்பதாக அமைச்சர் கூறினார்.

சுயாதீன ஆணைக்குழுக்களின் தீர்மானங்கள் தொடர்பாக மக்கள் திருப்தியடைவில்லை. 6ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்களின் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதாக அரசியலமைப்பு விவகாரத்துறை அமைச்சர் டியூ.குணசேகர மேலும் தெரிவித்தார். (அ)

# மக்களின் உயிருடன் விளையாடுவதற்கு சுகாதார அமைச்சருக்கு அனுமதி வழங்க முடியாது

## ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.

(கொழும்பு)

யுத்தத்தைக் காட்டி அரசாங்கம் மக்களின் இரத்தத்தை உறிஞ்சி குடிக்கின்றது என குற்றஞ்சாட்டிய ஐ.தே.கவின் கம்பஹா மாவட்ட எம்.பி. ஜயலத் ஜயவர்த்தன மக்களின் உயிருடன் விளையாடுவதற்கு சுகாதார அமைச்சருக்கு அனுமதிவழங்க முடியாது என வலியுறுத்தினார்.

காலாவதியான இரத்தப் பரிமாற்ற கருவிகளால் இரத்த வங்கியில் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக ஒத்திவைப்பு வேளை பிரேரணையை முன்வைத்து பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

### அரச ஊடகங்கள் தவறான தொடர் பிரசாரம்

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜயலத் ஜயவர்த்தன எம்.பி மேலும் கூறியதாவது,

சுயாதீன ஊடகங்களின் ஊடாக பெரும் பர பரப்பை ஏற்படுத்திய காலாவதியான இரத்தப் பரிமாற்றக் கருவித்தொகுதிகள் தொடர்பான ஊடக வெளிபபடுத்தல் மக்களை தவறான வழியில் இட்டுச் செல்கின்ற உண்மைக்கு புறம்பானதொரு செய்தியாகும் என அரச ஊடகங்களின் மூலம் பல தடவைகள் அறிவிக்கப்பட்டன.

இராணுவ வீரர்களுக்கு இரத்தம் வழங்குவதை பாதிக்கச் செய்வதற்கான ஒரு சூழ்ச்சியாகுமென சுயாதீனமான ஊடகங்கள் மூலம் செய்யப்பட்ட மேற்படி வெளிப்படுத் தலை அரச பொதுசன ஊடகங்கள் குறிப்பிட்டன.

### அரச அதிகாரிகள் அறிவிப்பு

காலாவதியான இரத்தப் பரிமாற்றக் கருவித் தொகுதிகள் இல்லையெனவும் அவ்வாறான காலாவதியான இரத்தப் பரிமாற்றக் கருவித் தொகுதிகள் எந்தவொரு இரத்ததானம் செய்வோருக்கும் அல்லது நோயாளருக்கும் பயன்படுத்தப்படவில்லையெனவும் அரச அதிகாரிகள் மீண்டும் மீண்டும் அறிவித்தனர்.

### உண்மை நிரூபிக்கப்பட்டது

ஆயினும் 2008 ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதிகொழும்பு 05 தேசிய இரத்த வங்கியில் உடைத்து நொருக்கி மறைத்துவைத்திருந்த காலாவதியான இரத்தப் பரிமாற்றக் கருவித் தொகுதிகள் பலவற்றை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உட்பட சுகாதார நலத்துறை போஷனை அமைச்சின் உத்தியோகத்தர்கள் சிலரின் முன்னிலையில் நான் கண்டு பிடித்தேன் இந்தச் செயலின் மூலம் சுயாதீன ஊடகங்களால் செய்யப்பட்ட வெளிப்படுத்தலில்உண்மை நிலை நிரூபிக் கப்பட்டது. சுகாதாரஅமைச்சின் அதிகாரிகள் மக்களைத் தவறான வழியில் இட்டுச் சென்று மூடி மறைப்பதற்கு எடுத்த கேவலமான முயற்சி வெற்றியளிக்கவில்லை.

உண்மை வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம் தேசிய இரத்த வங்கியின் பணிப்பாளரும் மேலும்மொரு மருத்துவரும் மற்றும் களஞ்சியசாலைப் பொறுப்பாளர் கள் இரு வரும் தமது வேலைகளில் இருந்து இடை நிறுத்தப்பட்டனர்.

மேற்படி முறைகேடு மற்றும் மோசடி தொடர்பான தற்போதுஊழல்கள் மோசடிகள் பற்றிய விசாரணைஆணைக்குழு மற்றும் அரச கணக்காய்வாளர் நாயகத்தினால் தனித் தனியாக விசாரணைகளும் புலனாய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரச கணக்காய்வாளர் நாயகம் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய இரண்டு பக்கங்கள் கொண்ட கடிதமும் குற்றவியல் ரீதியில் திரிபு படுத்தப்பட்டுள்ளது.

சுயாதீன பொதுசன ஊடகங்களால் பல தடவைகள் சமர்ப்பிக்கப்பட்ட செய்தியில் பிரகாரம் மேற்படி மக்கள் துரோகச் செயல் எதிர்க் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு.

### தரமற்ற பொருளை நாட்டுக்குவரழைத்ததேன்?

உரிய புலனாய்வின் பின்னர் உண்மையை அறியும் வரை உலக சுகாதார அமைப்பின் நிறைவேற்றுக் குழுவில் தலைவர் பதவியை வகிக்கின்ற தற்போதைய இலங்கையின் சுகாதார நலத்துறை போஷணை அமைச்சர் அமைதியாக வாய் மூடியிருந்ததன் மூலம் முழு இலங்கை வாழ் மக்களினதும் உயிர் ஆபத்துக்குள்ளாக்கப்பட்ட தென்பதை இம்மேதகு சபைக்கு அறிவிப்ப தோடு குறைந்த வாழ்நாளைக் கொண்டுள்ள மேற்படி இரத்தப் பரிமாற்றுக் கருவித் தொகுதிகளை எமதுநாட்டிற்கு வரவழைப்பதற்கு நடவடிக்கையெடுத்தது ஏனெனவும் காலாவதியான இரத்தப் பரிமாற்றக் கருவித் தொகு திகள் தொடர்பாகவும் அவை பயன்படுத்தப் படுதல் தொடர்பாகவும் சுகாதார அமைச்சு இன்று வரை மேற்கொண்டுள்ள விசாரணைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் உரிய அமைச்சர் இம்மேதகு சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டுமெனவும் நான் பிரேரிக்கிறேன். (அ)

கண்ணீரின் பாஷை அழுத கண்களு டையவனுக்கு மட்டுந்தான் தெளிவாகப் புரியும். - இந்தியா

வலம்புரி

## பரீட்சை விடைத்தாள் திருத்துவதாலும் தமிழ் மாணவர்களுக்குப் பாதிப்பே

2008 க.பொ.த. உயர் தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை காரணமாகத் தடைப்பட்டுப் போயுள்ளது.

சிங்கள மாணவர்களின் விடைத்தாள்களைத் திருத்தும் பணி முற்றாகத் தடைப்பட்டுள்ளது. எனினும் யாழ்ப்பாணத்திலிருந்து விடைத்தாள் திருத்தும் பணிக்காகக் கொழும்பு சென்ற சுமார் பதினேழு பேர் தமிழ் மாணவர்களின் விடைத்தாள்களைத் திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ளதான தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ் மாணவர்களின் விடைத்தாள் திருத்தும் பணிக்காக யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவர்கள் தமது தொழிற்சங்கப் போராட்டத்திற்குக் குந்தகம் விளைவித்து விட்டதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கு மேலாகச் சிங்கள மாணவர்களின் விடைத்தாள்கள் திருத்துவதற்கு முன்னதாகத் தமிழ் மாணவர்களின் விடைத்தாள்கள் திருத்தப்பட்டமையினால் கலந்துரையாடல்கள், விடைகளில் மாற்றங்கள் போன்றவை செய்யப்படவில்லை எனவும் சிங்கள மாணவர்களின் விடைத்தாள்கள் திருத்தும்போது பரீட்சகர்கள் கூடி தயாரிக்கப்பட்ட விடைகளில் உள்ள தவறுகளை நீக்கிய பின்னரே விடைத்தாள் மதிப்பீட்டைச் செய்வார்கள் எனவும் இவற்றின் காரணமாக தமிழ் மாணவர்கள் பெறுகின்ற புள்ளிகள் குறைவாக இருக்கும் எனவும் கூறப்படுகின்றது.

இதனால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்படும் ஆபத்து உண்டென்பது கல்வியாளர்களின் கருத்து.

எல்லா ஆசிரியர்களும் விடைத்தாள் திருத்தும் பணியைப் புறக்கணித்தபோது தமிழ் ஆசிரியர்கள் விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட்டதனால் வந்த வினை இதுவென பாதிப்பை உணர்ந்த பெற்றோர் குமுறுகின்றனர்.

இதற்கு நிவாரணந்தான் என்ன? என்றால் சிங்கள மாணவர்களின் விடைத்தாள் மதிப்பிடப்படும்போது தமிழ் மாணவர்களின் விடைத்தாள்களும் மீள மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

இல்லையேல் அகில இலங்கையில் முதல் இடம் பெறும் சந்தர்ப்பத்தை எமது மாணவர்கள் இழக்க வேண்டி ஏற்படும் என்பதுடன்-பல்கலைக்கழக அனுமதியில் திறமை அடிப்படையிலான இடங்களையும் நாம் விட்டுக்கொடுக்க வேண்டியதாக இருக்கும்.

எனவே இது விடயத்தில் கல்வியாளர்கள் கூடி தமிழ் மாணவர்கள் பாதிப்புறாத வகையில் உரிய தோசநிவர்த்தி செய்தாக வேண்டும்.

# புரட்டாதி மாதம் புனித நோன்பு வழிபாடுகட்குரிய சிறப்புடையது

சைவப்பெருமக்கள் வாரங்கள், மாதங்கள், நட்சத்திரங்கள், திதிகள் எனச் சிறப்பித்துநோன்புகள் இருப்பதும் வழிபாடுகள் செய்வதும் விழாக்கள் கொண்டாடுவதும் வருடந்தோறும் அவ்வப்போது நடைபெற்றுவருகின்றன. இவ்விதத்திலே புரட்டாதிமாதம் தனிச்சிறப்புடையதாக விளங்குகின்றது.

புரட்டாதி மாதத்திலே நம் முன்னோருக்கு நன்றிக்கடன் செய்யும் மாளய பட்ச பிதிர் வழிபாடுகளும், புரட்டாதிச் சனி வாரங்களில் சனீஸ்வர கிரகவழிபாடுகளும், நவராத்திரி காலத்தில் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி வழிபாடுகளும் மிகவும் சிறப்பாக எம் மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. வருடந்தோறும் வரும் ஆடி, புரட்டாதி, மார்கழி மும்மாதங்களும் ஆன்மீக வழிபாட்டிற்குரியதாகவும் மற்றைய சுபகாரியங்களுக்கு முக்கியத்துவமில்லாததாகவும் இருப்பதனால் இம் மாதங்களில் வரும் வழிபாட்டுத்தினங்களும், விரதநாட்களும் அதிக மானவர்களாற் பயபக்தியுடன் கொண்டாடப்படுவதனைக் காணலாம்.

புரட்டாதி மாதம் பிறக்கின்றதென்றவுடனேயே பிதிர்கடன் மாளயம், சிரார்த்தம் செய்யவேண்டும் என்பதிலும் புரட்டாதிச் சனிவாரங்களிற் சனீஸ் வரவழிபாடு கிரகப் பிரீதிகள் செய்ய வேண்டும் என்பதிலும் நவராத்திரி ஆரம்பமாகும் என்றதும் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி வழிபாடுகள் வீடுகள், பாடசாலைகள், கோவில்கள், பொது இடங்கள் எங்கும் பக்தி பூர்வமாக அனுஷ்டிப்பதில் ஆர்வமும் ஏற்படுவதைக் காணலாம்.

புரட்டாதி மாதத்தில் சூரியபகவான் கன்னிராசியிற் பிரவேசிப்பதும், கன்னிராசி புதன் கிரகத்தின் ஆட்சி வீடாயிருப்பதும், புதன்கிரகம் புத்திகாரகனாகச் சகலகலைகளையும் அறிந்து கொள்ளவும், அறிவாற்றலைப் பெருக்கவும் காரணமாயிருப்பதனால் வளர்பிறைத்திதியிற் புதன்கன்னிராசியிற் பிரவேசிக்கும் காலத்திலே வழிபாடுகள் செய்வது எமது அறிவாற்றலையும் புத்திசாதுரியங்களையும் வளர்த்துக்கொள்ளலா மென்பதனாற்றான் இக் காலத்திலே உலகமாதாவான அன்னை பராசக்தியும் ஈசுவர கடாட்சம் வேண்டி நோன்பிருந்தார். இதனாற்தான் புரட்டாதி வளர்பிறைத் திதியில் விஜயதசமி யன்று ஏடுதொடக்குதல் முதலான பல கலைகளையும் ஆரம்பிப்பதும் வழிபாடுகள் செய்வதுமாகும்.

"தைபிறந்தால் வழிபிறக்கும்" எனத் தை மாதத்தினைச் சிறப்பித்தல் போன்று "புரட்டாதி மாதம் புதுவாழ்வுதரும்" என இம் மாதத்திலே பலதரப்பட்ட வழிபாடுகளையும் மக்கள் செய்துவ ருகின்றார்கள். மற்ற மாதங்களை விட தனிச்சிறப்பானதாகப் புரட்டாதி மாதம் விளங்குவதற்குக் காரணம் இம் மாதத்திலே பிதிர்வழிபாடுகள், கிரக வழிபாடுகள், இறைசக்தி வழிபாடுகள், கல்வி, கலைச் சிறப்புக்கள், விழாக்கள் என்பன எல்லோராலும் கொண்டாடப்படுவது எனலாம்.

ஆதலால் நாமும் புரட்டாதித் தினங் களில் புதுவாழ்வு வேண்டி வழி பாடுகள் செய்து நலம் பலபெற்றிடுவோம்.

நீர்வை மணி

## அடுத்த மாதத்தில் இருந்து எரிபொருளின் விலை குறைக்கப்படும்

### கூட்டுத்தாபன தலைவர் அசந்த டி.மெல் தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்தமாதத்தில் இருந்து எரிபொருட்களின் விலையைக் குறைக்க முடியும் என எதிர்பார்ப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை விழ்ச்சி அடைந்திருப்பதன் காரணமாக குறைந்த விலையில் எரிபொருளை கொள்வனவு செய்ய முடிந்திருப்பதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் அசந்த டிமெல் தெரிவித்தார்.

எனினும் உள்நாட்டுச் சந்தையில் தற்போதைய இருப்பு முன்னைய விலையில் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக இந்த மாதம் எரிபொருள் விலையை குறைக்க முடியாது இருப்பதாக அவர் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

எவ்வாறு இருப் பினும் பெற்றோலிய விநியோகத்தின் முன்னர் ஏற்பட்ட நஷ்டத்தின் ஒரு பகுதி அடுத்த மாதம் விநியோகிக்கப்படும் எரிபொருளின் விலையுடன் இணைத்துக் கொள்ளப் படலாம் எனவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்து இருக்கிறார்.

(அ)

## சிவத்தமிழ்ச் செல்விக்கு அருள் ஒளி சிறப்பு மலர்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தால் வெளியிடப்படும் மாதாந்த சஞ்சிகை இம் முறை, இச் சஞ்சிகையை ஆரம்பித்து சிவத்தமிழ் செல்வி அன்னையின் சிறப்பு மலராக வெளி வந்துள்ளது. அன்னையின் இறுதி யாத்திரையை நேரில் காணாதவர்க்கும் அவ் வுணர்வை ஏற்படுத்தியுள்ளார் ஆசிரியர்.




அன்னையின் வாழ்வியற் பணி களை எடுத்துக் காட்டும் பல பெரியார்களின் பிரார்த்தனை உரைகள் மற்றும் இரங்கலுரைகளைத் தாங்கி இம்மலர் வெளியாகியுள்ளது.

அத்துடன் முகப்பு அட்டை சிவத்தமிழ் அன்னை ஆலயத்தில் அருள் பாலிக்கும் அன்னையுடன் இரண்டறக் கலந்து என்றும் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார் என்பதை எடுத்துக் காட்டுவது போல் காட்சியளிக்கின்றது.

பின்புற அட்டையில் அன்னையின் இறுதியாத்திரை நினைவும் பிரார்த்தனை நிகழ்வுகளின் நிழற் படங்களைத் தாங்கியுள்ளது.

(ஒ)

## யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் மடுதேவாலயத்தைப் பார்வையிட்டார்



(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகளின் பின்னர் யாழ். மறை மாவட்ட ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை முதன் முறையாக மடு தேவாலயத்திற்கு சென்றுள்ளார்.

கத்தோலிக்க திருச் சபையின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்புக்கு சென்றிருந்த ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், மடுவுக்கு சென்று தேவாலயத்தை பார்வையிட்டதுடன் புனரமைப்பு பணிகளையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டார்.

ஆயருடன் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் வண.பிதா விக்டர் சோசை மற்றும் கொழும்பு பேராயர் இல்லத்திலிருந்து அருட்தந்தையர்கள் சிலரும் சென்றி ருந்தனர்.

அதேவேளை, பூசை வழிபாடுகளில் பங்குகொள்ள அருட்சகோதரிகள் குழுவொன்று மன்னாரில் இருந்து மடு தேவாலயத்துக்கு சென்றுள்ளதாக மன்னார் ஆயர் இல்லம் தெரிவித்துள்ளது.

மடு மாதா தேவாலயத்தை புனரமைப்பதற்காக கிறிஸ்தவ விவகார அமைச்சு 1.6மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனாலும் கத்தோலிக்க திருச்சபையின் நிதியின் மூலமே தற்போது குறைந்தளவு புனரமைப்பு பணிகள் இடம் பெறுவதாகவும் கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## தீயணைப்புச் சேவை இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீய அணைப்பு வாகனம் அவசர திருத்த வேலைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதனால் மறு அறிவித்தல் வரை தீயணைப்புச் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை செயலாளர் இ.ரத் தின சிங்கம் அறியத்தந்துள்ளார். (அ)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

### ஆளுமை வளர்ச்சியின் விதிமுறைகள்



நமது செயல்களை கட்டுப்படுத்த முடியவில்லை எண்ணங்களை அடக்க முடியவில்லை என்று அடிக்கடி நாம் முறையிடுகிறோம். எப்படி அடக்க முடியும்? நுண் இயக்கங்களை நாம் அடக்க முடிந்தால், அது எண்ணமாகும் முன்பே, செயலாகும் . முன்பே, அதன் மூலத்தை நாம் பற்ற முடியுமானால் மட்டுமே அதனை முழுமையாக நாம் அடக்க முடியும் . இந்த நுண்ணிய சக்திகளை, நுண்ணிய காரணங்களைப் பகுக்கவும், ஆராயவும், அறியவும், இறுதியாக அடக்கியாளவும் முறை ஒன்று இருக்குமானால் அப்போது தான் நம்மை நாம் அடக்க முடியும்.

# வான் புலிகளின் விமானிகள் வெளிநாட்டவர் என பிரசாரம் செய்யும் தெற்கு ஊடகங்கள்



வவுனியாவிலுள்ள கட்டளையிடும் பிரதான இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் ஆட்லறி எறிகணை மற்றும் விமான தாக்குதல் முறையிலான மரபு வழி தாக்குதல் நடத்திய நாளில் இருந்து இதுவரை சிங்கள, ஆங்கில ஊடகங்கள் அது பற்றிய உண்மைகளை மூடிமறைத்து வருகின்றன.

விடுதலைப் புலிகளுடைய மரபுவழி தாக்குதல் பாணியிலான முறைமைகளையும், குறிப்பாக புதிய தொழில்நுட்பமுறையிலான மிகவும் நுண்ணிய ஆய்வு ரீதியான தாக்குதல் என்பதனால் அதனை ஏற்றுக்கொள்வதற்கு ஆங்கில் ஊடகங்கள் தயங்குகின்றன.

புலிகள் நடத்திய முன்னைய தாக்குதலகளும் ஆய்வு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்டதுடன் கள நிலைமைகளுக்கு ஏற்ப புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய பொருத்தமான உத்திகள் அவ்வப்போது பயன்படுத்தியதாகத்தான் இருந்தது.

ஆனால் வவுனியாவிலுள்ள கட்டளையிடும் பிரதான இராணுவ முகாம் மீதான புலிகளின் தாக்குதல் உத்தி என்பதை புலிகளினுடைய அதிஉச்சமான வினைத்திறனாக ஏற்றுக்கொண்டால் அல்லது வெளிப்படுத்தினால் அரசாங்கத்தினுடைய பொருளாதார தடைகள், உணவு நெருக்கடிகள் மற்றும் மோசமான மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றுக்கு மத்தியில் அது ஒட்டுமொத்த தமிழர்களுடைய வளர்ச்சியாகிவிடும் என்ற கருதுநிலை ஆங்கில ஊடகங்களுக்கும் சிங்கள சமூகத்திற்கும் வந்துவிட்டதுபோல் தெரிகின்றது.

விசேடமாக அதுவும் இந்தியாவினால் வழங்கப்பட்ட ராடர்களும் அதன் கட்டுப்பாட்டு அறைகளும் புலிகளின் தாக்குதல் திறனால் சேதமடைந்துவிட்டன ஒரு தடவையேனும் புலிகளின் விமானத்தை படைகளினால் சுட்டுவீழ்த்த முடியாது போய்விட்டதே என்பதை ஏற்பதற்கு ஆங்கில ஊடகங்களுக்கு கடினமாகவுள்ளது.

மகிந்த அரசு என்பதை விட சிங்கள தேசத்திற்கு தமிழர் தேசத்தால் ஏற்பட்ட ஒரு மோசமான தோல்வியாக இதனை பார்க்கின்றனர்.

இதன் வெளிப்பாடாகவே 12.09.08 அன்று ஆங்கில ஊடகம் ஒன்றில் வெளியான புலிகளின் தாக்குதல் பற்றிய கட்டுரை ஒன்றை நோக்க வேண்டியுள்ளது.

புலிகளின் விமானத்தை செலுத்தியவர்கள் வெளிநாட்டு விமானிகளா? என்ற கேள்வியுடன் எழுதப்பட்ட அந்த கட்டுரையின் உள்நோக்கம் சிங்கள மக்களை ஆறுதல்படுத்துவதற்காக என்பது தெளிவாகின்றது. (அதாவது வெளிநாட்டு விமானிகள் இல்லையானால் புலிகளால் இந்த தாக்குதலை திறமையாக செய்திருக்க முடியாது என்று கூறி ஆறுதல் படுத்துகின்றனர். அதேவேளை, வெளிநாட்டு படைகள் உதவி புரிவதாக கூறி சிங்கள மக்களை ஆத்திரத்திற்கு உள்ளாக்கி தமிழர்களுக்கு எதிராக உசார்படுத்துகின்றனர் என்றும் கருதலாம்)

மேலும் இதனை இரண்டு வகையாக பார்க்க முடியும். ஒன்று புலிகள் வெளிநாட்டு விமானிகளை பயன்படுத்துகின்றார்கள் என்று கூறுவதன் மூலமாக புலிகளில் அதாவது தமிழர்களில் விமானங்களை செலுத்தக்கூடிய அளவு திறமையானவர்கள் இல்லை என்பதில் சிங்களவர்களை மகிழ்விப்பது. இரண்டாவது அவ்வாறு கூறுவதன் மூலம் இந்தியாவை உசுப்பி புலிகளுக்கு எதிரான போரை மேலும் தீவிரப் படுத்துவது அல்லது மேலும் உதவிகளை பெறுவது. (ஆனால் இந்திய புலனாய்வாளர்களுக்கு உண்மை தெரியும்)

சிங்கள ஆங்கில ஊடகங்களுக்கு ஏற்பட்ட தாங்கிக்கொள்ள முடியாத பொறாமையின் வெளிப்பாடுதான் புலிகள் வெளிநாட்டு விமானிகளை பயன்படுதினார்களா என்ற கேள்வியுடன் கூடிய அந்த செய்தி விமர்சனம் கோடி காட்டுகின்றது.

பொதுவாக சிங்கள ஊடகங்களின் பண்பு மூடிமறைப்பதுதான் என்று எடுத்துக் கொண்டாலும் டெய்லி மிரர், மோர்ணிங் லீடர் போன்ற ஆங்கில பத்திரிகைகள் மகிந்த ராஜபக்ச அரசாங்கத்திற்கு சுட்டிக் காட்ட வேண்டும் என்பதற்காகவேனும் புலிகளின் தாக்குதல் தொடர்பில் கணிசமாக பெறப்படுகின்ற இராணுவ உள்ளக தகவல்கள் மூலமாக சேத விபரங்களை வெளியிட்டு வந்தார்கள்.

அவ்வாறு வெளியிடப்பட்ட பல தகவல்கள் குறிப்பிடத்தக்க அளவு உண்மையாகவே இருந்தது. அதனால் இராணுவ உயர் பீடத்திற்கும் அரசாங்கத்திற்கும் பல சங்கடமான நிலைமைகளும் ஏற்பட்டிருக்கின்றன.

அதன் காரணமாக குறித்த ஆங்கில பத்தி எழுத்தாளர்கள் பாதுகாப்பு உயர் பீடத்தினால் மறைமுகமானதும் நேரடியானதுமான அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுமிருந்தனர். ஆனால், வவுனியாவிலுள்ள கட்டளையிடும் பிரதான இராணுவ முகாம் மீது ஆட்லறி எறிகணை மற்றும் விமான தாக்குதல் முறையிலான மரபுவழி தாக்குதல் பற்றி இம்முறை ஆங்கில ஊடகங்கள் தாங்களாகவே சுயதணிக்கை ஒன்றை செய்து கொண்டுள்ளன.

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பலாலி விமான தளத்தின் மீது புலிகள் முதன் முதலில் விமான தாக்குதல் நடத்தியபோது படைத்தரப்பு அதனை மறுத்திருந்தது. பின்னர் கொழும்பில் விமான தாக்குதல் நடத்தியபோது சிறியரக விமானம் என்று கூறி ஆறுதல் அடைந்தனர். சிங்கள, ஆங்கில ஊடகங்களும் அவ்வாறுதான் எழுதியிருந்தன.

விமல் வீரவன்ச உட்பட ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட குரும்பட்டி விமானம் என்றும் சிறிய ரக விமானம் என்றுதான் கூறியிருந்தனர்.

பாராளுமன்றத்தில் ஜே.வி. பி. உட்பட அரச தரப்பு எதிர்த்தரப்பு உறுப்பினர்களிடையே அதுபற்றிய நீண்ட கருத்து பரிமாறல்களும் வாக்குவாதங்களும் ஏன் கிண்டல்களும் இடம்பெற்றிருந்தன. இவ்வாறு சிங்களத்தரப்பு ஏற்றுக்கொள்ள முடியாமை அல்லது பொறுத்துக்கொள்ள முடியாமை என்ற வாதத்தால் தங்களை தாங்களே ஏமாற்றிக்கொண்டிருந்தனர்.

தற்போது வல்லரசு நாடுகளே திரும்பிப்பார்க்கும் அளவிற்கு அல்லது அவர்களை யோசிக்க வைக்கும் அளவிற்கு புலிகளின் விமான தாக்குதல் திறன் வளர்ச்சி கண்டுள்ளது, அல்லது நீட்சியடைந்து வருகின்றது என்பதை அறிந்து வெளிநாட்டு விமானிகள் ஓடுவதாக சிங்கள மக்களுக்கு கதை சொல்கின்றார்கள்.

இப்படி கூறுவதும் அவர்களுக்கு ஆபத்தானதுதான். அப்படியானால் சர்வதேச நாடு ஒன்று புலிகளை அங்கீரிக்கப் போகின்றது என பொருள்கொள்ளலாம். அதுவும் சிங்களத்தரப்புக்கு ஏற்புடையதல்லவே.

ஆகவே யதார்த்தம் ஒன்றை சிங்கள சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். விடுதலை இயக்கம் ஒன்று எப்போதும் வெளிநாட்டவர்களை நம்பி போராட்டத்தை ஆரம்பிக்காது. குறிப்பாக விடுதலைப் புலிகளை பொறுத்தவரை தமிழர் தாயகத்தில் உள்ள வளங்களையும் ஆளணிகளையும் பயன்படுத்தியே போராட்டத்தில் வளர்ச்சி கண்டு வந்தவர்கள்.

சர்வதேச நாடுகள் எப்போதும் விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவாக பேசாது, உதவிகூட செய்யமாட்டார்கள். பயங்கரவாதம் என்ற போர்வைக்குள் மிக லாவகமாக போராட்டத்தின் நியாயப்பாடுகளை தள்ளிவிடுவார்கள்.

அரசுக்கு அரசு என்பதுதான் சர்வதேச நாடுகளின் கோட்பாடும் நிலைப்பாடுகளும். அரசுகள் எத்தகைய அரச பயங்கரவாதங்களில், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டாலும் அதனை ஜனநாயகம் என்றுதான் பார்ப்பார்கள்.

விடுதலை வேண்டி நிற்கும் இனங்களும் விடுதலை இயக்கங்களும் தங்களுடைய போராட்டத்தை நடத்துகின்ற முறைமையிலேதான் எந்த வெற்றியையும் காண முடியும். ஆனால் அதற்காக பல வகையான இழப்புக்களையும் வேதனைகளையும் வல்லரசு நாடுகளின் சோதனைகளையும் விடுதலை இயக்கங்கள் தாங்கிக்கொள்ள வேண்டும். ஏன் பின்னடைவுகளும் அவ்வப்போது ஏற்படலாம். திரைப்பட காட்சி போன்று மூன்று அல்லது இரண்டரை மணித்தியாலங்களுக்குள் போராட்டத்தில் வெற்றி காணமுடியாது. அல்லது குறித்த இலக்கை அடைய முடியாது.

விடுதலை புலிகளினுடைய போராட்ட வடிவம் இந்த முறைமைகளுக்கு உதாரணமானது. புலிகளை பொறுத்தவரை அரசு, படைத்தரப்பு என்பதை விட அவர்களுக்கு சர்வதேச நாடுகள்தான் தற்போது பிரச்சினையாக இருக்கின்றன.

அதாவது படைத்தரப்புடனான புலிகளின் ஒவ்வொரு சமர்க்கள வெற்றியும் சர்வதேசத்திற்கு சவாலாக இருக்கின்றது. ஆனால், அவர்கள் அதனை வெளிக்காட்டுவதில்லை. இருந்தாலும் அவ்வப்போது சர்வதேச ரீதியாக இருக்கின்ற புலிகளின் வலைப்பின்னல்களை அறுத்துக்கொட்டுவதில் கவனம் செலுத்துகின்றனர்.

கிளிநொச்சியில் இருக்கின்ற தகரங்களையும் முல்லைத்தீவில் இருக்கின்ற தடிகளையும் எடுத்துத்தான் புலிகள் விமானம் செய்து இராணுவ நிலைகளை தாக்குகின்றனர். (வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்ற பழமொழிக்கான சிறந்த உதாரணமாக இதனை எடுத்துக்கொள்ளலாம்) ஆனால்அரசு உக்ரேனிடமும், ரஷ்யாவிடம், இந்தியாவிடமும் விமானங்களை பெற்றுத்தான் புலிகளின் பகுதிகளில் விமான தாக்குதல்களை நடத்துகின்றனர்.

அரசு முதன் முதலில் யாழ்ப்பாணத்தில் 1986 ஆம் ஆண்டு விமான தாக்குதலை நடத்தியபோது வெளிநாட்டு விமானிகள்தான் விமானங்களை செலுத்தியிருந்தனர்.

அதே காலப்பகுதியில் புலிகளின் வாசு, பொன்னம்மான் போன்ற தளபதிகள் தமிழர்களுக்கென்று விமானங்களை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டனர். 1986 ஆம் ஆண்டில் அவர்களின் இந்த கன்னி முயற்சி இடம்பெற்றிருந்தது. (இந்த காலப் பகுதியில் புலிகள் உட்பட ஏனைய விடுதலை இயக்கங்களின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் இருந்தது.)

இந்த நிலையில் ஆறாயிரம் தடைவை புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் விமான தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தற்போது கூறுகின்றார், பெருமைப் படுகின்றார். ஆனால் இந்திய ராடர்களையும் வெளிநாட்டு விமானிகளின் உதவிகளையும் பெற்றுத்தான் படைத்தரப்பு இந்த தாக்குதல்களை நடத்துகின்றது.இது வெளிப்படையானது.

உண்மையில் அம்பாந்தோட்டையிலுள்ள தகரத்தையும் மாத்தறையிலுள்ள தடிகளையும் எடுத்து விமானம் ஒன்றை செய்து புலிகளின் பகுதிகளில் விமானத் தாக்குதல் நடத்துவார்களாயின் அது பாராட்டுக்குரியதுதான். அத்துடன் படைகளுக்கு தேவையான வளங்களையும் படைகளுக்கு வேண்டிய ஆளணிகளையும் இலங்கை மண்ணில் இருந்தே அரசு பயன்படுத்துமாக இருந்தால் அது இன்னும் விசேடமானதும் பாராட்டுக்குரியதுமாக இருக்கும்.

ஆனால்,அரசும் படைத்தரப்பும் அவ்வாறு செய்வார்களா? ஜே.ஆர். காலத்திலிருந்து தற்போதைய மகிந்த ராஜபக்ச வரை புலிகளுக்கு எதிரான போருக்கு வெளிநாட்டு படைகளையும் வெளிநாட்டு தொழில்நுட்ப உதவிகளையும்தான் பெறுகின்றனர்.

இந்த நிலையில் கோத்தபாய ராஜபக்ச கூறியதுபோல் புலிகள் ஆறு தடவை மாத்திரம்தான் விமான தாக்குதல்களை நடத்தியிருக்கின்றனர் என்றால் அது ஆறாயிரம் தடவைகள் தாக்கியதற்கு சமன். ஏனெனில் புலிகளின் விமானம் என்பது அவர்களின் சொந்த தயாரிப்பு.

விமானிகளும் தமிழர்கள்தான் இதனை நிறுவியது புலிகளின் வினைத் திறன்தான்.

சொந்த மண்ணில் உள்ள வளங்களை பயன்படுத்தி சிறப்பான போராட்டம் நடத்துகின்ற விடுதலை இயக்கங்களுக்கான அங்கீகாரம் அல்லது அந்த விடுதலை இயக்கங்கள் சார்ந்து நிற்கின்ற இனங்களுக்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் இருந்து வெளிப்படாத ஒன்றாக இருக்கின்றது.

-நன்றி இணையத்தளம்

## 15 வயதுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான

# துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் இன்று பற்றிக்ஸ், யூனியன் கல்லூரிகள் மோதல்

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுக்குட்பட்டவர்களுக்கான துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையில் இடம்பெற்ற இச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் தகுதி பெற்றன.


இரு அணிகளுக்குமிடையில் நடைபெறும் இன்றைய இறுதிப் போட்டிக்கு ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்ப்பாண சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.ஜெயராஜசிங்கம் கலந்து சிறப்பிக்கின்றார்.

யாழ்ப்பாணப் பாடசாலை துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவரும் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபருமான என்.ஏ.நிமலேந்திரன் தலைமையில் நடைபெறும்.

ஆரம்ப நிகழ்வுகள் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகின்றது. இன்று காலை 9.15 மணிக்கு ஆரம்பமாகும் இறுதிப் போட்டியில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு ஜெ.கிளிங்டனும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிக்கு க.இராகுலனும் தலைமை தாங்குகின்றனர்.

இன்றைய இறுதிப் போட்டிக்கு அனைவரும் வந்து வீரர்களுக்கு உற்சாகம் அளிப்பதுடன் இப் போட்டியை சிறப்பிக்குமாறும் யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் செயலாளரும் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியருமான எஸ்.சகாஜராஜா கேட்டுள்ளார்.(05)

### யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி




இருப்பவர்கள் இடமிருந்து வலம்:- ஜி.ஜெனகன் (அணியின் பொறுப்பாசிரியர்), எஸ். சகாஜராஜா (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்),ஜே.கிளிங்டன் (அணித் தலைவர்), வண.பிதா எம்.ஜெரோ செல்வநாயகம் (கல்லூரி முதல்வர்), ஏ.கபாஸ்கரன் (துணை அணித் தலைவர்); ஏ.எஸ்.நிஷாந்தன் (பயிற்றுவிப்பாளர்),

நிற்பவர்கள் இடமிருந்து வலம் கீழ் வரிசை:- ஜி.ரிஷாந்த் ரியூட்டர், ஏ.எம். நொபேர்ட், டி.சுகீர்தன், எம்.மரினோ சஞ்சை,வி.குகபாலா, டபிள்யூ.ஐ.நிலக்ஷன், ர.சுஜித் டார்வின், ஆர்.நிதர்ஷன், ரி.மொரிஸ் மிரோஷன், ஆர்.ஜக்ஷன்,

மேல் வரிசை:- என்.ரவிராஜ், ஏ.தேவானந்தன், ரி.விமலுக்ஷன், ஜி.சத்தியப்பிரியன், ரி.தர்ஷன்.

### யாழ்.யூனியன் கல்லூரி அணி



கீழே இடமிருந்து வலம்:- திரு.இ.இராஜராஜன் (பொறுப்பாசிரியர், பயிற்றுவிப்பாளர்) க.இராகுலன் (தலைவர்), சு.புண்ணியசீலன் (அதிபர்), கே.அனுசியன் (உப தலைவர்), இ.பிரசாந்,

மேலே இடமிருந்து வலம்:- எஸ்.சிந்தாகரன், ஜி.கௌதமன், க.சிலோஜன், எஸ்.சுஜந்திரன், ஜே.அனோஸ், எஸ்.கஜீவன், பி.துவாரகன், கி.ஜோகிறேசியன், பி.பானுசன், உ.சாய்ராம், பி.ஆகீசன், எஸ்.மதனகோபி. *(படங்கள்:- கோபி)*

# இந்தியக் கிரிக்கெட் லீக்கில் மீண்டும் மொகமெட் யூசுப்

இந்திய கிரிக்கெட் லீக்குடன்(ஐ.சி.எல்) சட்டரீதியாக மோதிய பாகிஸ்தான் வீரர் மொகமெட் யூசுப் கடைசியில் ஐ.சி.எல். கிரிக்கெட்டிற்கே திரும்பலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் அவரது சர்வதேச கிரிக்கெட் வாழ்வு முடிவுக்கு வரும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் வீரர் மொகமெட் யூசுப் ஐ.சி.எல். இல் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டார். பின்னர் ஐ.சி.சி. அதனை அங்கீகரிக்காத நிலை ஏற்பட்டபோது பாகிஸ்தான் கிரிக்கெட்சபை அவரை அழைத்துப் பேசி ஐ.சி.எல் அமைப்பிலிருந்து விலகச் செய்தது. அதன் பின்னர் அவர் பி.சி.சி.ஐயின் ஐ.பி.எல்லில் விளையாட முடிவு செய்தார். ஆனால் ஐ.சி.எல். நிர்வாகம் யூசுப் மீது வழக்கு தொடர்ந்து அது இன்னமும் நடைபெற்று வருகிறது.

அதாவது இப்போது ஐ.சி.எல். தன் மீது தொடர்ந்த வழக்கை வாபஸ் பெற்றால் மீண்டும் தான் சேர விரும்புவதாக யூசுப் ஐ.சி.எல்.க்கு தகவல் அனுப்பியுள்ளதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.(05)

# என் நடத்தைக்காக மன்னிப்புக் கேட்கிறேன்

## சைமண்ட்ஸ் உருக்கம்

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் சர்ச்சைக்குரிய சகல துறை வீரர் சைமண்ட்ஸ் பங்களாதேஷுக்கு எதிராக சமீபத்தில் டார்வின் நகரில் நடந்த ஒருநாள் தொடரில் இவர் நீக்கப்பட்டார்.

அணி வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் மீன்பிடிக்கச் சென்றிருந்ததால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து சைமண்ட்ஸ் அவுஸ்திரேலிய அணிக்காக நான் மீண்டும் விளையாட மாட்டேன் என்று திடீரென அறிவித்தார்.

இதைத் தெரிவித்த ஒரு வாரத்தில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து அவர் நீக்கப்பட்டார். இதற்கிடையே தனது முடிவில் சைமண்ட்ஸ் மாறியுள்ளார். குயின்ஸ்லாந்து அணி வீரரான அவர் நேற்றுக் காலை பயிற்சியில் ஈடுபட்டார். அப்போது அவர் கூறியதாவது,

அவுஸ்திரேலிய அணிக்காக மீண்டும் விளையாடுவேன். அணியில் இடம்பெற கடுமையாகப் போராடுவேன். சிறந்த வீரராக மட்டுமன்றி சிறந்த மனிதனாகவும் இருக்க என்னை மேம்படுத்திக் கொள்வேன்.

எனது நடத்தைக்காக சக வீரர்கள், குடும்பத்தினர் மற்றும் ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (05)

# ஹர்பஜன் அடித்த பின் நட்பு அதிகரித்துள்ளது

## சிறிசாந்த் தெரிவிப்பு

ஹர்பஜனுடனான சண்டை குடும்பத் தகராறு போன்றது. அவர் அடித்த பின்னர் எங்களுக்குள்ளான நட்பு அதிகரித்துள்ளது என்று இந்திய வேகப் பந்துவீச்சாளர் சிறிசாந்த் கூறினார்.

கோவை ஜி.ஆர்.டி கல்லூரி வணிகவியல் துறை சார்பில் நேற்று முன்தினம் நேருக்கு நேர் நிகழ்ச்சி நடந்தது. இதில் இந்தியக் கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளர் சிறிசாந்த் கலந்து கொண்டு மாணவ மாணவிகளின் கேள்விகளுக்குப் பதிலளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

ஹர்பஜனுக்கும் எனக்கும் ஏற்பட்ட பிரச்சினை ஒரு குடும்பத்திற்குள் ஏற்பட்ட தகராறு. என்னை எனது அண்ணன் அடித்து விட்டார். அவ்வளவுதான். தற்போது இருவருக்குள் சொல்ல முடியாத அளவுக்கு நட்பும் உறவும் உள்ளது.

நாட்டுக்காக ஆடுவது என்பது பெரிய விடயம். இதற்காக நான் கடுமையாக உழைத்துள்ளேன் என்றார். (05)

# நீச்சலில் அமெரிக்கா ஆதிக்கம்

(பீஜிங்)

பீஜிங்கில் நடைபெற்று வரும் உடல் ஊனமுற்றோர்களுக்கான பராலிம்பிக் தொடரில் நீச்சல் போட்டிகள் நேற்று முன்தினத்துடன் முடிவுக்கு வந்தன.

141 தங்கப் பதக்கங்களுக்காக 9 நாள்கள் நடைபெற்ற நீச்சல் போட்டிகளில் 100ற்கும் மேற்பட்ட உலக சாதனைகள் முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் அமெரிக்கா 17 தங்கம், 14 வெள்ளி, 13 வெண்கலத்துடன் மொத்தம் 44 பதக்கங்களை வென்று நீச்சலில் ஆதிக்கம் செலுத்தியது.

இரண்டாவது உக்ரைனும்(13 தங்கம், 10 வெள்ளி, 20 வெண்கலம்), மூன்றாவது இடத்தைச் சீனாவும் (12 தங்கம், 22 வெள்ளி, 17 வெண்கலம்) பிடித்துள்ளன. அதிக தங்கம் வென்ற வீராங்கனை என்ற பெருமையை தென்னாபிரிக்காவின் நதாலிடு டொய்ட் பெற்றுள்ளார்.

இவர் 100 மீற்றர் பட்டர் பிளை, 100 மீ. மீற்றர் பிரிஸ்டைல்ஸ், 200 மீற்றர் தனிநபர் மெட்லே, 400 மீற்றர் பிரிஸ்டைல்ஸ் மற்றும் 50 மீற்றர் பிரிஸ்டைல்ஸ் ஆகிய போட்டிகளில் தங்கம் வென்றார்.

அமெரிக்க வீராங்கனைகள் எரின் பாபோவிச் மற்றும் ஜெசிகா லொங் ஆகியோர் தலா 4 தங்கம் உட்பட 6 பதக்கங்கள் வென்று சாதித்தனர்.

ஆண்கள் பிரிவில் அவுஸ்திரேலியாவின் மதிவ் காவ்ரி (4 தங்கம், 3 வெள்ளி)மற்றும் பிரேஸிலின் டானியல் டயஸ் (4 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலம்) தலா 7 பதக்கங்கள் வென்றனர்.

நேற்று முன்தினம் நடந்த போட்டிகளில் பெண்களுக்கான 200 மீற்றர் டி53 ஓட்டத்தில் சீனாவின் குவாங்கிலிசா 29.17 விநாடிகளில் ஓடி முடித்து புதிய சாதனையுடன் தங்கம் வென்றார்.

அமெரிக்காவின் ஜெசிகா கலி வெள்ளியையும் சீனாவின் ஜு ஹாங்சுவான் வெண்கலத்தையும் கைப்பற்றினர். ஆண்களுக்கான நீளம் தாண்டுதலில் சீனாவின் லிவான் 6.61 மீற்றர் தாண்டி தங்கத்தையும் அமெரிக்காவின் லெக்ஸ்கில்லட் வெள்ளியையும் கிரிசின் அதெனாய்ஸ் பாராக்ஸ் வெண்கலத்தையும் வென்றனர்.



கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்று வரும் பராலிம்பிக் தொடர் இன்றுடன் முடிவடைகின்றது. (05)

# அரசு சாரா நிறுவனங்களின் பணி குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் இதுவரையில் கிளிநொச்சியில் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கையொன்றினை சமர்ப்பிக்க வேண்டுமென பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கோரியுள்ளார்.

பாதுகாப்புச் செயலருக்கும் குறித்த நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பில் அரசாங்கம் மேற்கொள்கின்ற கொள்கை ரீதியான தீர்மானங்கள் குறித்து கேள்வி கேட்பதற்கு அந் நிறுவனங்களுக்கு உரிமை இல்லை எனவும் அமைச்சர் இங்கு கூறியுள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து அந் நிறுவனங்கள் நேற்று விலகுவதாக அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் இறுதி வாகனத் தொகுதி நேற்று வவுனியாவை வந்தடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு உத்தரவாதம் கிடைத்ததையடுத்தே தமது இறுதி வாகன அணி நேற்று வன்னியிலிருந்து ஓமந்தையூடாக வவுனியா நோக்கி பயணித்ததாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. (ச-3)

## நெடுந்தீவு-நயினாதீவு...

பதுடன் நூலில் தாலி கட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்காக ஊர்காவற்றுறை நீதவான் திருமதி ஜோய் மகாதேவன், ஊர்காவற்றுறை வைத்தியசாலை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி தாமரைச்செல்வி, வேலணை வைத்தியசாலை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி டயஸ் ஆகிய இருவரும் சம்பவ இடத்திற்குச் சென்றதுடன் ஊர்காவற்றுறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லலித் பிரேமரட்ண ; ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கிங்ஸ்லி குணரட்ன ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவும் சம்பவ இடத்திற்கு நேற்று சென்றுள்ளன.

இதேவேளை நான்கு சடலங்களும் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவுப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கரையொதுங்கிய சடலம் இந்தியருடையது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சடலத்தில் இருந்து எடுக்கப்பட்ட தேர்தல் திணைக்கள அடையாள அட்டை அடிப்படையில் கேசவ் லால் பட்டேல் போலிதாஷ் என அவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## சுழிபுரத்தில்...

லேயே உயிரிழந்துள்ளார் மற்றவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் வேளையில் உயிரிழந்துள்ளார்.

சடலங்கள் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாகம் மாவட்ட மேலதிக நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா மரண விசாரணைகளை மேற்கொண்டார்.(ச-5,49)

## கொழும்பில்...

கப்படுகின்றது.

இதனால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் குண்டு வெடிப்பின் அதிர்ச்சியில் பாதிக்கப்பட்ட நால்வர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மருத்துவமனை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்பேருந்தில் சுமார் 65க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-3,5)

## பல்லாயிரக்...

சந்தித்து வருகின்றனர்.

அங்கு இடம்பெற்றுவரும் மோதல்கள் தொடர்பாக நான் ஆழ்ந்த கவலை அடைகிறேன். அனைத்துலக மனிதாபிமான விதிகளை எல்லாத் தரப்பினரும் மதிக்கவேண்டுமென்பதை நான் நினைவு படுத்த விரும்புகின்றேன்.

ஐக்கிய நாடுகள் சபையின் உதவி நிறுவனங்களை வன்னியில் இருந்து வெளியேறும்படி இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அங்கு வாழும் ஆயிரக்கணக்கான மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் விநியோகத்தில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

வன்னியில் வாழும் மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருந்து அத்தியாவசியப் பொருட்கள் சென்றடைவதற்கு தேவையான பாதுகாப்புக்களை இரு தரப்பினரும் வழங்கவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

ஆசிரியராய், பகுதித் தலைவராய்,
உப அதிபராய், பிரதியதிபராய் உயர்ந்து 37
ஆண்டுகள் கல்வித்துறையில் அரும்பணியாற்றிய
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரதியதிபர்



உயர்திரு.
பொ.மகேஸ்வரன்
(B.Sc (Sp), Dip -in Edu.)
அவர்களை
அன்னாரது மணிவிழா நாளில் மனதார
வாழ்த்துகின்றோம்.

அறுபது அகவைகள் ஆயின போதிலும்
ஆண்டுகள் நூறிலும் ஆசானாய் ஒளிர்க!
பெறுவதற் கினிய நன்மக்கள் மூவரொடு
பெட்புறும் இல்லறத் துணையினால் மகிழ்க!
அரியநற் செயல்களை ஆற்றியே யன்பினால்
அனைவரும் போற்றிட ஆனந்தங் காண்க!
விரியுமிவ் வுலகினில் விளங்கிடுங் கதிரென
வெற்றிகள் பெற்றுமே நீடூழி வாழ்க!

வாழ்த்துவோர்,
கலாநிதி செ.திருநாவுக்கரசுவும்
குடும்பத்தினரும்.

84,செட்டித்தெரு,
நல்லூர்.

(C-1572)

# பரு.பிரதேச செயலரின் வீட்டில் கொள்ளையர்கள் அட்டகாசம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரனின் வீட்டில் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பொருட்களை சேதப்படுத்தியுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

வீட்டிலிருந்த பிரதேச செயலரின் மாமனார் கதவைத் திறந்து வெளியே வந்தபோது வெளியில் காத்திருந்த திருடர்கள் பிரதேச செயலரின் வீட்டினுள் நுழைந்து மின் விளக்குகள், வீட்டு ஜன்னல்களை சேதப்படுத்தியுள்ளனர்.

அவ்வேளை பிரதேச செயலரும் அவரது மனைவியும் தமது தொலைபேசிகள் மூலம் அயலவருக்கு சம்பவம் குறித்து அறிவித்தனர். இதனையடுத்து அயலவர்கள் கூச்சலிட்டவாறு பிரதேச செயலரின் வீட்டை நோக்கிச் சென்றபோது திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

முகமூடி அணிந்தவாறு பொல்லுகள், வாள்களுடன் வந்தவர்களே பிரதேச செயலரின் வீட்டை சேதப்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வீட்டிலிருந்து வெளியே வந்த முதியவர் அணிந்திருந்த மோதிரத்தை கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ச-52)

# 2 இளைஞர்கள் விபத்தில் காயம்

வடமராட்சி புறாப்பொறுக்கியில் நேற்று மதியம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் லொறிவிபத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

கரவெட்டியைச் சேர்ந்த ஆர்.கார்த்தீபன், (வயது 27) அல்வாயைச் சேர்ந்த ஆர்.ஜீவானந்தன் (வயது 23) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்ததாக தெரிவிக்கப்பட்டது. படுகாயமடைந்த இருவரும், மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ச-49,52)

## முறிகண்டியில் விமானத்...

வரின் சடலம் உருக்குலைந்த நிலையில் இருப்பதனால், அதனை உடனடியாக அடையாளம் காணமுடியவில்லை என கிளிநொச்சி வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாண்டியன்குளத்தைச் சேர்ந்தவர்களான பொன்னுத்துரை புதியமோகன் (வயது-32), பொன்னுத்துரை தயாபரன் (வயது-22), செல்வபுரத்தைச் சேர்ந்த குஞ்சப்பு முருகேசு (வயது-44) ஆகியோருடன் மற்றுமொருவரும் காயமடைந்து மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பாடசாலை அருகிலும்,உடையார்கட்டு பகுதியிலும் நேற்று முன்தினம் காலை 6.45 மணிக்கு கிபீர் குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதல்களில் க.இராஜேஸ்வரி (வயது-52),ஆனந்தபுரத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மரியசீலி (வயது-45) ஆகிய இருவர் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## 99 வீதமான தொண்டு...

பதிலளிக்கையில் கூறியதாவது,

உள்ளூர் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களை வன்னியிலிருந்து வெளியேறுமாறு அரசாங்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை காலக்கெடு விதித்திருந்தது. அதற்கு அமைவாக இதுவரையிலும் 99 வீதமான நிறுவனங்கள் வவுனியாவிற்குள் வந்துள்ளன.

தங்களை வெளியேற வேண்டாம் என்று பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதாக சில தொண்டு நிறுவனங்கள் பல்வேறு அர்த்தத்தை கற்பிக்கின்றன.

தெற்கில் 1989 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கு எதிராக மக்கள் தாங்களாகவே எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சர்வதேச தொண்டு நிறுவனங்களில் ஊழியர்களுக்கு எவ்விதமான அனர்த்தங்களும் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற நோக்கத்திற்காகவே அவர்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருமாறு கோரிக்கை விடுத்திருந்தோம்.

அதேபோல அங்குள்ள அப்பாவி மக்களையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. உக்கிரமான மோதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் அப்பகுதியில் வேலைத்திட்டங்களையோ, உட்கட்டமைப்பு வசதிகளையோ முன்னெடுக்க முடியாது என்பதனால் தொண்டு நிறுவனங்கள் தங்களுடைய வளங்களுடன் வவுனியாவிற்கு வருவதுடன் அந்த வளங்களை அரசாங்கத்திடம் காண்பிக்கவேண்டும் என்றும் கோரியுள்ளது. (ச-5)

## பிரபாகரனை கைது செய்தால்...

விடுதலைப் புலிகளுக்கு எதிராக வட பகுதியில் நடைபெற்றுவரும் தாக்குதல்கள் மகிழ்ச்சியளிக்கும் வகையில் இருப்பதாக எமது படைத்தளபதிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக அழிப்போம். இருப்பினும் படையினரின் வெற்றிக்கான கால எல்லையை தெரிவிக்க இயலாது. அதற்கு குறிப்பிட்ட காலமாகும். புலிகளை படை ரீதியாக நாங்கள் தோற்கடித்தாலும் கூட சில புலிகள் பதுங்கித்தான் இருப்பார்கள்.

வட பகுதியில் போராளிகளின் பகுதிகளை கைப்பற்றிய பின்னர் அங்கு மாகாண சபை தேர்தல் நடத்தப்படும். கிழக்கில் மேற்கொள்ளப்பட்டதைப் போல வடபகுதியிலும் தமிழர்கள் தங்களது தலைவர்களையும் பிரதிநிதிகளையும் தெரிவு செய்ய அனுமதிக்கப்படுவர்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் வழித் தீர்வுக்கான நடவடிக்கைகளை அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவினூடே நாம் முன்னரே மேற்கொண்டிருக்கிறோம்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது ஆயுதங்களுடன் அரசாங்கத்திடம் சரணடைந்த பின்னரே பேச்சுக்கள் நடத்துவதற்கான சாத்தியங்கள் உள்ளன.

புலிகள் சரணடைய அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் ஒருபோதும் இனியொரு போர் நிறுத்த ஒப்பந்தம்மேற்கொள்ளப்பட மாட்டாது. எதிர்காலத்தில் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கான தேவை எதுவும் இருக்காது என்றே நினைக்கிறோம்.

புலிகளை ஆதரிக்கும் புலம்பெயர் தமிழர்கள்,தாயகத்திற்கு திரும்பி ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்ளவேண்டும். பிரபாகரனும் புலிகளின் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் பொட்டு அம்மானும் தமது ஆயுதங்களுடன் சரணடைய வேண்டும்.

அவர்கள் மீண்டும் ஆயுதங்களுடன் நடமாட நான் அனுமதிக்கமாட்டேன். நாங்கள் பிரபாகரனை பிடித்தால் முதலில் இந்தியாவிடம் தான் ஒப்படைப்போம். இருந்தாலும் வன்னிக் காடுகளில் பிரபாகரனின் சரியான இருப்பிடம் குறித்து எமக்குத் தெரியவில்லை.

இந்தியாவின் உதவியானது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக இருக்கக் கூடியது. மேலதிகமாக அதனை நாங்கள் விபரிக்க விரும்பவில்லை.

அரச சார்பற்ற நிறுவனங்களை அவர்களின் பாதுகாப்பு காரணங்களுக்காகவே நாங்கள் வன்னியிலிருந்து வெளியேறுமாறு கேட்டுக் கொண்டோம். இது ஒரு குறுகியகால நடவடிக்கையே. விரைவில் அந்த நிறுவனங்கள் மீண்டும் அப்பகுதிகளுக்குச் சென்று மக்களுக்குச் சேவையாற்றலாம்.

இருப்பினும் அதற்குரிய காலவரையறையை எம்மால் வெளியிட இயலாது என்றார் ஜனாதிபதி. (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.